# கவலை பற்றிய நேரடி உரை



வேதவசனத்தின் வல்லமையால்
உணர்ச்சிப்போராட்டங்களை எதிர்கொள்ளுதல்!

## ஜாய்ஸ் மேயர்

முன்பதிப்பு: எனக்குதவுங்கள் நான் கவலையோடிருக்கிறேன்

# கவலை

பற்றிய நேரடி உரை

# கவலை

## பற்றிய நேரடி உரை

வேதவசனத்தின் வல்லமையால்
உணர்ச்சிப்போராட்டங்களை
எதிர்கொள்ளுதல்!

# ஜாய்ஸ் மேயர்

Joyce Meyer
Ministries®
Nanakramguda, Hyderabad - 500 008

Unless otherwise indicated, all Scripture quotations are taken from *The Amplified Bible* (AMP). *The Amplified Bible, Old Testament,* copyright © 1965, 1987 by Zondervan Corporation. *The Amplified New Testament,* copyright © 1954, 1958, 1987 by The Lockman Foundation. Used by permission.

Scripture quotations marked (NKJV) are taken from *The New King James Version.* Copyright © 1979, 1980, 1982, Thomas Nelson, Inc.

Scriptures marked KJV are taken from the *King James Version* of the Bible.

Originally published as *Help Me I'm Worried.*

Copyright © 2014 by Joyce Meyer Ministries - Asia

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, or stored in a database or retrieval system, without the prior written permission of Joyce Meyer Ministries - Asia.

Joyce Meyer Ministries - Asia
Nanakramguda,
Hyderabad - 500 008
Phone: +91-40-2300 6777
Website: www.jmmindia.org

Straight Talk on WORRY - *Tamil*
*Overcoming Emotional Battles with the Power of God's Word!*

*Printed at:*
Caxton Offset Pvt. Ltd.
Hyderabad - 500 004

# பொருளடக்கம்


*முன்னுரை* vii

*பகுதி 1* **இரகசிய உறைவிடம்** 1

1 இரகசிய உறைவிடம் 3

2 வழிக்காட்டிகளை அல்லது வழிக்கற்களை வாசியுங்கள்: இயேசுவை விசுவாசியுங்கள் 11

3 எல்லாமே சரியாகிவிடும் 27

4 நம் எண்ணங்களை விட தேவனுடைய எண்ணங்கள் 49

முடிவுரை 73

*பகுதி 2* **வேதவசனங்கள்** 89

கவலையை எதிர்கொள்ள வேத வாக்கியங்கள் 91

**ஜெபம்**

கவலையை நீக்க பிரார்த்திப்போம் 95

தேவனோடு தனிப்பட்ட உறவை வைத்துக்கொள்வதற்கான ஜெபம் 97

# முன்னுரை

இயேசு உங்களுடன் ஒரு பேரம் செய்ய நினைக்கிறார். அவருக்குத் தேவை உங்களின் கவலை. உங்கள் பிரச்சனைகள், உங்கள் தோல்விகள், உங்களின் "சாம்பல்". அதற்காக அவர் உங்களுக்கு அழகைக் கொடுப்பார். உங்களின் கவலையை அவர் எடுத்துக் கொண்டு, அவர் உங்களை ஆதரிப்பார்.

> ஆகையால் ஏற்ற காலத்தில் தேவன் உங்களை
> உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள்
> அடங்கியிருங்கள்.
>
> அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள்
> கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்.
>
> 1 பேதுரு 5:6,7

> கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல்
> இருக்கிறார். சிறுமைப்பட்டவர் களுக்கு சுவிசேஷத்தை
> அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்.
> இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்
> கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு

விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்,

சீயோனில் துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்திற்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார். அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக் கென்று நாட்டின நீதியின் விருட்சங்க ளென்னப்படுவார்கள்.

ஏசாயா 61:1,3

ஆண்டவர் தம் கவனத்தை நம்மை ஆதரிக்க விரும்புகிறார். ஆனால் அவர் தருவதற்கு ஏதுவாக நாம் நம் கவலையுடன் கூடிய கவனத்தைத் தவிர்க்க வேண்டும். பெரும்பாலானவர்கள் கடவுள் தம்மை கவனித்துக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணுகிறார்கள். ஆனால் அதே சமயம் அவர் காண்பிக்கும் வழிக்காகக் காத்திராமல் தாங்கள் கவலைப்பட்டு ஒரு விடையும் காண முற்படுகிறார்கள். உண்மையில் அவர்கள் தங்களின் சாம்பலிலேயே உழன்று கொண்டிருக் கிறார்கள். இருப்பினும் தேவன் தங்களுக்கு அழகைக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். தேவன் நமக்கு அழகைக் கொடுக்க வேண்டுமானால் நாம் நம்முடைய சாம்பலை அவரிடம் கொடுக்க வேண்டும்.

அவர் நம்மை நன்கு கவனித்துக்காப்பார் என்ற நம்பிக்கையில் தான் நாம் நம்முடைய கவலையை அவரிடம் செலுத்துகிறோம். எபி 4:3 கூறுகிறது: விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கி றோம். அவருடைய கிரியைகள் உலகத் தோற்ற முதல் முடிந்திருந்தும்

இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்ப தில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்.

விசுவாசத்தின் மூலம் தான் நாம் கர்த்தரின் அமைதியான இருப்பிடத்திற்குள் நுழைகி றோம். விசுவாசத்திற்கு நேர் எதிரானது கவலை. கவலையானது நம் சமாதானத்தைக் களவாடி விடும். உடலை தேய்த்து சீக்காளியாகவும் ஆக்கிவிடும். நாம் கவலைப்படுவோமானால் கடவுளை நம்பாதவர்கள் மட்டுமல்ல, அவரின் இளைப்பாறுதலிலும் பிரவேசிக்காதவர்களாகி விடுவோம்.

என்ன ஒரு பேரம்! நீங்கள் உங்கள் சாம்பலை கர்த்தரிடம் கொடுக்கிறீர்கள். அவர் அழகைக் கொடுக்கிறார். உங்களின் கவலைகளையும், கரிசனைகளையும் அவருக்குக் கொடுக்கிறீர்கள், அவர் உங்களுக்கு பாதுகாப்பையும், நிலைபெறுதலையும், அடைக்கலத்தையும், நிறைவான சந்தோஷத்தையும் அவரால் ஆதரிக்கப்படும் சிலாக்கியத்தையும் அவர் உங்களுக்கு கொடுக்கிறார்.

# பகுதி 1

# இரகசிய உறைவிடம்

# 1

# இரகசிய உறைவிடம்

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ
வல்லவருடைய நிழலில் தங்குவான்.

சங்கீதம் 91:1

நாம் சமாதானத்துடனும், பாதுகாப்புடனும் வசிப்பதற்கு இயேசு ஒரு ரகசியமான இடம் வைத்திருக்கிறார். அது அவரின் அமைதி யிருப்பிடமேயாகும். அங்கேயே அவரின் அமைதியும் அரவணைப்பும் இருக்கும். அந்த ஆன்மீக இடத்தில் கவலை களையப்பட்டு அமைதி அரசாளும். இயேசு பிரத்தியட்சமாக இருக்கும் இடமே அதுவாகும். நாம் அவரை பணிந்து பிரார்த்தனை செய்து அவரது அருகாமையில் இருக்கும்போது அந்த ரகசிய இருப்பிடத்திலேயே தானிருக்கிறோம்.

அந்த இருப்பிடத்தில் இருக்கிறோம் என்னும்போது நாம் அங்கேயே வசிக்கிறோம் என்பதாகிறது. நீங்களும் நானும் கூட அங்கு வசிக்கிறோம் என்கிறபோது ஏதோ அடிக்கடி போய்விட்டு

வருவது போலல்லாமல் நிரந்தரமாக அந்த இடத்தில் வசிப்பது என்பதேயாகும்.

இதுபற்றி புதிய ஏற்பாட்டிலும் கூறப்பட்டுள்ளது. யோவான் 15:7ல் இயேசு சொல்கிறார், நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

நீங்களும் நானும் இயேசுவுடன் ஒன்றியிருப்போமானால் அதுவே அவருடன் நாம் சேர்ந்து தங்கி வசிப்பதாகும். விரிவாக்கப்பட்ட வேதாகமத்தில் யோவான் 15:7ல் "நீங்கள் என்னில் நிலைத்திருந்தால் (என்னுடன் நிலைத்து இணைந்திருந்தால்) என் வார்த்தைகள் உங்களிலுமிருந்தால், உங்கள் இருதயங்களில் தொடர்ந்து வாழ்ந்தால் நீங்கள் விரும்புவதைக் கேளுங்கள் அது செய்யப்படும்" என்று கூறப்பட்டுள்ளது.

இன்னொரு விதமாக சொல்ல வேண்டுமானால் நாம் இயேசுவுடன் ஆழமாக ஊன்றப்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு சமயத்திலும் நிலைமையிலும் நமக்கு கிடைக்கும் உதவி எங்கிருந்து எப்படி கிடைக்கிறது என்பதை நாம் தெரிந்திருக்க வேண்டும். நமக்கு ஓர் பாதுகாப்பான அமைதியான ரகசிய இடம் தேவை. நாம் இயேசுவையே முழுமையாக நம்பிருக்க வேண்டும்.

## ரகசிய இடத்தில்

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான் என்று சங்கீதம் 91:1ல் கூறப்பட்டுள்ளது. யாரொருவர் ரகசிய இடத்தில் தங்குகிறார்க ளோ அவர்கள்

நிச்சயமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பார்களென்று சங்கீதக்காரன் கூறுகிறான். அந்த ரகசிய இடமானது மறைந்து கொள்ளவும், தனிமையையும் அடைக்கலத்தையும் தருவதாகவும் உள்ளது. நாம் புண்படுத்தப் பட்டாலோ, சக்தியிழந்து போனாலோ அல்லது சோர்ந்துப் போனாலோ உடனே ஓடுவது அந்த ரகசிய இடம் தான். நாம் துன்பத்தில் வாழும் போதும் சரிவர நடத்தப்படாத போதும், இன்னும் கொஞ்சமும் தாங்கமுடியாது என்ற நிலை ஏற்படும் போதும் நமக்கு மிகமிக தேவையான இடம் என்று நினைத்து ஓடுவதும் அந்த ரகசிய இடம் தான்.

எனக்கு இப்போதும் நினைவில் இருக்கிறது நான் சிறுபிள்ளையாயிருந்தபோது நாங்கள் ஒரு பெரிய வீட்டில் வசிக்கும்படி இருந்தது. என் தாய் அந்த வீட்டை சுத்தம் செய்யும் பணியை ஏற்றுக்கொண்டதால் அதுவே அந்த வீட்டின் வாடகைக்கு ஈடாயிற்று. அது மரத்தினால் வேலைப் பாடுகள் பல செய்யப்பட்ட ஒரு பெரிய கட்டிடமாகும். அதில் நல்ல பொருத்தமான பல மறைவிடங்கள் இருந்தன. ஒருநாள் நான் அப்படிப்பட்ட ஒரு மறைவிடத்தைக் கண்டு பிடித்தேன். அது மாடிப்படியின் கீழே வண்ணக்கண்ணாடிகள் பதிக்கப்பட்ட ஒரு சன்னலின் அருகே அமைக்கப்பட்ட மரத்தா லான ஒரு பெஞ்சாகும்.

அந்த பென்ஞ்சில் உட்கார்ந்து யோசனையில் நான் ஆழ்ந்திருந்ததை இப்போதும் கூட என்னால் நினைத்துப் பார்க்க முடிகிறது. சிறு பிள்ளையாயிருந்த நான் எதைப் பற்றி அப்படி யோசித்தேன் என்பது தெரியவில்லை. இருப்பினும் எனக்கும் அந்த வயதில் சில வருத்தங்களும், பிரச்சனைகளும் இருக்கவே செய்தன.

என்னுடைய வீட்டிலும் பலவித தொல் லைகளும், மனவருத்தமும் ஏற்படக்கூடிய பலவித காரியங்களும் நிறையவே இருந்தன. அவைகளால் பாதிக்கப்பட்டு நான் பயமடைந்து போன வேளைகளிலும் எனக்கொரு அடைக்கலம் தேவைப்பட்ட வேளைகளிலும் நான் மாடிப்படியின் அடியில் அமைந்த அந்த மரபெஞ்சுதான் என் மறைவிடமாக இருந்தது.

தேவனே நம்முடைய மறைவிடமாக இருக்க விரும்புகிறாரென்று இந்த வசனம் சொல்கின்றது. சிலர் குடிபோதையிலும், போதை மருந்துகள் பயன்படுத்துவதிலும், ஓயாமல் டி.வி. பார்ப்பதிலும் அடைக்கலம் தேடி மறைகிறார்கள். சிலர் மனநிம்மதியின்றி தலைமுதல் கால் வரையில் போர்வையால் மறைத்துப்படுத்து விடுகிறார்கள். பலரும் பல விஷயங்களினால் பலவிதமாக தங்களை மறைத்துக் கொள்ள அடைக்கலம் தேடி ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்.

உலகில் அப்படிப்பட்ட இடங்களைத் தேடி அலைவதை விடுத்து தன்னிடம் அடைக்கலம் தேடுவதையே இயேசு விரும்புகிறார். மிகவும் உயர்ந்த பாதுகாப்பான இடம் என்பதன் அர்த்தம் அதுவேயாகும். நாம் பிரச்சனைகளால் கஷ்டங்களில் இருக்கும் போது, இயேசுவின் நிழலில் அடைக்கல மாவதையே அவர் விரும்புகிறார். நாம் அவரிடமே ஓட வேண்டும்.

## சர்வ வல்லவருடைய நிழலில்

எல்லாம் வல்ல இறைவனின் நிழலில் (எந்த
பகைவனாலும் வெல்ல முடியாத வல்லமை)

சங் 91:1

நாம் எல்லாம் வல்ல பரமபிதாவின் நிழலில் இருக்கும்போது, நாம் எங்கே காணப்படுவோம்? சங்கீதக்காரன் கூறுவதுபோல், “சர்வ வல்லவருடைய நிழலில் தங்கியிருப்போம்”. இந்த இடத்தில்தான் தம் மக்கள் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

கஷ்டங்கள் வரும்போதும், மனம் துயரத்துக் குள்ளாகும் போதும் மட்டும் அவரிடம் சிறிது நேரம் அடைக்கலம் தேடுவதுமல்லாமல் இயேசுவின் நிழலில், அருகாமையில் எப்போதும் வசிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் அப்படி இயேசுவின் அருகாமையில், நிழலில் வசிப்போமானால் உறுதியாக இருப்போம். இயேசுவின் வல்மையை எந்த எதிரியாலும் ஒன்றும் செய்ய முடியாது. எந்த சாத்தானும் நமக்கு எந்த கெடுதலும் செய்ய முடியாது.

நான் பலமுறை அவரின் அடைக்கலம் தேடிப்போவதும் பிறகு ஓடிவந்து விடுவதுமாக இருந்தேன். அதன்மூலம் தெரிந்து கொண்டது அவரிடம் நிரந்தரமாக அடைக்கலம் தேடித் தங்குவது நமக்கு எவ்வளவு சுகம் என்பது தான்.

எப்போதோ ஒரு நேரத்தில்லாமல் தேவன் நமக்கு எப்போதுமே தேவையானவர். யோவான் 15:5 இயேசு சொல்கிறார், “நானே திராட்சை செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளை கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது”.

எல்லாம் வல்ல இறைவனின் நிழலில் தங்குதல் என்பதன் முழு அர்த்தம் என்ன? முதலாவதாக நிழல் என்பதன் பொருள் வெயிலிலும் உலகின் சூட்டிலிருந்தும் நம்மைக் காக்கும் இடம் என்பதாகும். நிழலில் நட்ட நடுநிழலும் உண்டு. அதன்

ஓரங்களும் உண்டு. நாம் அவரின் சிறகுகளின் நிழலில் தங்க முடிவு செய்தால் நாம் தகியிருக்க ஒரு எல்லை என்று ஒன்றிருக்கிறது.

எல்லை என்பது இரண்டு விதமான தன்மைகள் அல்லது நிலைகளை பிரிக்கும் ஒரு பகுதியாகும். நிழலை எடுத்துக் கொள்வோமென்றால், நிழல் முடிந்து சூரிய வெளிச்சம் தொடங்கும் இடம் தான் எல்லை எனப்படும்.

நட்ட நடு வெய்யில் நேரத்தில் ஒரு மரத்தைக்காண்போமென்றால், அதன் நிழலில் நிற்பது நிற்பது வெய்யிலில் நிற்பதை விட அதிக சுகத்தைக் கொடுப்பதாக இருக்கின்றது. வெய்யிலில் வேலை செய்பவர்கள் அவர்களின் இடைவெளி நேரத்தில் இளைப்பாற மரநிழலையே நாடுகிறார்கள். சிலர் குளுமையாக இருக்க வேண்டி வீடுகளைச் சுற்றி மரங்களை நடுகிறார்கள். ஆகையினால் நாம் நிழலையே அதிகம் நாடுகிறோம். குறிப்பாக வெப்பம் அதிகமிருக்கும் நாட்களில்.

நாம் இயேசுவின் பாதுகாப்பு சிறகுகளின் கீழ் தங்க முடிவு செய்தோமானால் வாழ்க்கை சுகமாக இருக்கும். அதன் வெப்பத்தில் தவிக்காமல் குளுமையில் சுகம் காண்போம். பிரச்சனைகளைப் பற்றி கவலையில்லாமல் அவரின் பாதுகாப்பில் ஓய்வு பெற்றிருப்போம்.

நாம் வெய்யிலிலே இருக்க முடிவு செய்வோமென்றால், நாம் வசதியின்று, வியர்த்து, நிர்பந்தமாக, தாகத்துடனும், வறண்டும் இருக்க வேண்டியிருக்கும். உலகத்தின் வெப்பத்தால் வியர்த்து, தாகத்தால் தவித்து அல்லல்பட தேவையா அல்லது தேவனின் சிறகுகளின் நிழலில் தங்கி சுகம் அனுபவிப்போமா என்பதை நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையிலேயே முடிவு செய்ய வேண்டும்.

நீங்கள் எங்கு நிற்க முடிவு செய்கிறீர்கள்? எனக்கு நிழலில் தங்கவே விருப்பம். ஆயினும் நாம் எல்லோருமே அடிக்கடி செய்வதுபோல் நானும் அவ்வவ்போது மெதுவாக நகர்ந்து வெய்யிலில் போய் வியர்த்து விறுவிறுத்துப் போய், பிறகு உடனே நிழலுக்கு நகர்ந்து வந்தும், மறுபடி மெதுவே நகர்ந்து வெய்யிலுக் குப்போவதும் மாறிமாறி நிகழ்த்திக்கொண்டிருந்தேன்.

ரோமர் 1:17 சொல்வதுபோல் நாம் எல்லோருமே விசுவாசத்தால் பிழைக்கக் கூடும். ஆயினும் நம்பிக்கைக்கும், அவநம்பிக்கைக்கு மிடையில் போய் வந்து கொண்டே தானிருக்கிறோம்.

நாம் எப்போதும் தேவனின் நிழலில் பாதுகாப்பாகவே இருக்க நினைக்கிறோம். இருப்பினும் எப்போது அங்கிருந்து நகர்ந்து தொல்லைகளில் சிக்கி காய்ச்சல்படுகிறோம், என்பது தெரிந்துக்கொள்ள முடியாமல் போகிறது. அதை முன்பே தெரிந்துகொள்வது எப்படி? தேவன் நமக்காக நம்வழி முழுவதும் நட்டு வைத்திருக்கும் வழிகற்களே தூரம், திசை, வழி எல்லாம் காண்பிக்கும்.

# 2

# வழிக்காட்டிகளை அல்லது வழிக்கற்களை வாசியுங்கள்: இயேசுவை விசுவாசியுங்கள்

நீங்கள் ஒரு பாதையில் உங்கள் வாகனத் தைச் செலுத்திக்கொண்டு போவதாகக் கற்பனை செய்யுங்கள். பாதையின் நடுவில் அதைப் பிரிக்கும் மஞ்சள் கோடுகள் இருக்கின்றன. அந்த கோட்டின் எல்லைக்குள் போனால் ஒன்றுமில்லை. அதைத்தாண்டி தாறுமாறாகப் போனால் வேறு வாகனங்க ளுடன் நேருக்கு நேர் மோதிக் கொள்ளும் பெரும் ஆபத்துண்டு.

பாதையின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்துக்குச் செல்ல வேண்டுமாயின் முன்னும் பின்னும் வந்தும் போயும் கொண்டிருக்கும் மற்ற வாகனங்களை கவனித்து செலுத்த வேண்டும். இல்லையென்றால் எதிலும் மோதிக் கொள்ளும் ஆபத்து உண்டு.

சாலைகளில் உள்ள வழிகாட்டிப் படங்கள் சரியான திசைகளையும், எச்சரிக்கைகளையும் காண்பிக்கின்றன. ஒற்றை வழிப்பாதை, வளைவு, மான்கள் தாண்டும் இடம், பாறைகள் உருண்டு விழக்கூடிய பாதை, பாதை செப்பனிடும் பணி என்று பலவிதமான விவரங்களும் தரப்பட்டிருக்கும். இப்படிப் பட்ட வழிக்காட்டிகளை சரிவர கவனித்தபடி வண்டியை செலுத்திக் கொண்டு போனால் எதிரில் போய் மோதுவதையோ, நாமே பாதையின் ஓரத்தில் உள்ள பள்ளத்தில் போய் விழுவதையோ தவிர்க்கலாம்.

இதுபோலவே வாழ்க்கையிலும் நமக்கு எச்சரிக்கை செய்யும் பல ஆவிக்குரிய வழிகாட்டிகள் இருக்கின்றன. நாம் தேவனுடைய பாதுகாப்பின் கீழிருக்க, நாம் அவற்றை சரிவர கவனித்து, இயேசுவிடம் நம்பிக்கை வைத்து கவலைகளை ஒதுக்கி நம்மை அவரிடம் ஒப்படைக்க வேண்டும். ஒவ்வொன்றிற்கும் காரணகாரியங்களை தேடிப்போகாமல் நம் எண்ணங்களை உண்மை, அன்பு, பரிசுத்தம், நியாயம், நாணயம், நற்செய்தி, நற்குணம் எல்லாவற்றிலேயே செலுத்துதல் பயனுள்ளதாகும். (பிலிப்பியர் 4:8)

நாம் வழிகாட்டிகளின் எச்சரிக்கையை கவனித்து அதற்குத் தக்கவாறு நடந்தோமா னால் ஏதொரு பிரச்சனையும் வராமல் சரியான பாதையிலேயே போய்க் கொண்டிருப்போம். அதுபோலவே வாழ்க்கையின் வழிகாட்டி களை பின்பற்றி நடக்கும்போது ஆண்டவர் நம்மை காப்பாற்றுகிறார் (இரட்சிக்கிறார்). தேவனுடைய வார்த்தையிலிருக்கும், அற்புதமான, ஆச்சரியமான வாக்குத்தத்தங்கள் நம் வாழ்க்கையில் நிறைவேறுவதை நாம் அனுபவிக்கமுடியும்.

## வழிகாட்டிகளை கவனியுங்கள்!

**நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும் போதும், இடது புறமாய் சாயும்போதும், வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.**

**ஏசாயா 30:21**

வாழ்க்கை என்ற சாலையில் வாகனத்தை செலுத்தும்போது ஒருவேளை நாம் போகும் பாதை சரிவர இல்லாமல் போய் மேற்கொண்டு போவதில் சிரமம் ஏற்பட்டால் அந்த சமயத்தில் நாம் யோசித்துப் பார்க்கும் போது, வழியில் சில மைல்களுக்கு முன்பு “தேவனை நம்பு, கவலைப் படாதே” என்ற ஒரு வழி காட்டியினை சரிவர வாசிக்காமல் தவறவிட்டோம் என்பது புரியும். அந்த சமயத்திலாவது விட்ட வழியை பிடித்து சரி செய்யலாம். அதைவிட்டு தவறி விட்டோம் என்பதையே கவனிக்காமல், மேலும் போய்க்கொணடேயிருந்தால் பள்ளத்தில் விழுந்து படுகாயமுறுவோம்.

அதுபோலவே, வாழ்க்கையிலும் தேவன் நமக்காகவே வைத்துள்ள வழிகாட்டிகளை சரிவர கவனியாமல் இயேசுவிடம் முழு நம்பிக்கை வைக்காமல் கவலையுறுவோ மானால் நாம் அவரின் பாதுகாப்பைப் பெற முடியாமல் போகிறது. சாத்தான் நம்மை சுலபமாக ஆண்டுக்கொள்வான். நம்மை கவலையும், அமைதியின்மையும் ஆட்கொள்ளுகிறது.

## நேரான பாதை

**முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல்**
**சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு**

வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்

எபிரெயர் 12:13

நாம் ஒரு தவறான முடிவை செய்துவிட்டு பின்பு இயேசுவிடம் நம்பிக்கை வைக்காமல், நாமாகவே கவலைக்குட்பட்டு மன அமைதியையும் இழக்கிறோம். நாம் எங்கோ, எதையோ, தவற விட்டோம். அதனால்தான் ஏதும் சரியாக நடக்கவில்லையென்று எண்ண முற்படுகிறோம்.

மன அமைதியை இழந்த உடனேயே நாம் ஒரு கணம் சற்று நின்று நான் என்ன தவறு செய்தேன் என்று கூறி அதுபற்றி யோசிக்க வேண்டும்.

வாழ்க்கைப் பாதையில் நாம் சென்று கொண்டிருக்கும்போது திடீரென்று அமைதியிழந்து போவது தெரிகிறது. உடனே நான் தேவனே நான் எங்கு என்ன தவறு செய்தேன் என்று எனக்குள் ஒரு கேள்வியை எழுப்புவேன். இயேசுவின் பாதுகாப்பிலிருந்து நான் விலகியதாலேயே அப்படி மன அமைதியிழந்து போனேன் என்பதை உணர்ந்து கொள்வேன்.

நானாகவே கவலைப்பட்டு துவங்குவதால் தான் அப்படி நேருகிறது. சில சமயங்களில் நாம் தவறுகள் செய்து, அதை நினைத்து வருந்தாமல் போவதிலும் ஏற்படுகிறது. சிலரிடம் சரிவர நடந்து கொள்ளாமலும், அதைப்பற்றி நினைத்துக்கூட பார்க்காமல் போவதும் கூட அமைதியின்மைக்குக் காரணமாகிறது.

இப்படிப்பட்ட நேரங்களில் இயேசுவே நான் ஏன் மன அமைதியிழந்தேன் என்பதை எனக்குக் கூறுங்கள் என்று வேண்டுவேன். எனக்கு காரணம் தெரிந்தால் உடனே அதை சரிவர செய்வதற்கான முயற்சிகள் செய்வேன். இயேசு காண்பித்த

வழியில் செல்கையில் நீங்கள் கவலையினால் தாக்கப்பட்டால், நீங்கள் இயேசு மத்தேயு 6:25-32ல் கூறியுள்ளதை வாய்விட்டு சத்தமாக வாசியுங்கள்.

## கவலைப்படுவதை நிறுத்து

ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப் படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகி றேன். ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?

மத்தேயு 6:25

நீங்கள் உணவு கட்டுபாட்டை கடை பிடிப்பவரானால் மேலேயுள்ள செய்யுளின் முதல் பாகத்தை வாசிக்க வேண்டும். அதில் உணவைப் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது. என்னைப்போலவே நீங்களும் உணவு கட்டுப்பாட்டை கடைபிடிப்பவரானால், உணவைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள்.

நான் உணவு கட்டுப்பாட்டிலிருந்த போது எந்நேரமும் - எந்த மாதிரி உணவு, எந்த அளவு, எப்படியெப்படியெல்லாம் சமைப்பது, எப்போது சமைப்பது என்று ஓயாமல் உணவைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது நினைவில் வருகிறது. மேலும் அதுவே என் அதிக பசிக்குக் காரணமாயிற்று. உண்மையில் உணவை பற்றி நாம் கவலைப்படுவதைவிட அதிகமாக என்ன நடக்குமோ, ஏதோ நடக்குமோ என்று கவலைப்படுவதே அதிகம். நம்மில் பலருக்கும் தேவையான

உணவும், உடைகளும் இருக்க வீடும், வாகனமும் கிடைத்து விடுகிறது. அதனால் அதைப்பற்றி அதிகம் கவலையில்லை. ஆனால் கடினமான நேரங்களில் கஷ்டங்களை சந்திக்கையில், நமக்குள்ளேயே இதை எப்படி எதிர் கொள்வோம் எப்படி சமாளிப்போம் என்ற குரலைக்கேட்டு கவலைக்குள்ளாவோம்.

## பறவைகளைப் பாருங்கள்

ஆகாயத்துப் பட்சிகளை கவனித்துப் பாருங்கள்.
அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை,
களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை.
அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்.
அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள்
அல்லவா?

மத்தேயு 6:26

நீங்கள் எப்போதேனும் பறவை ஒன்று மனிதனைப் போல் தவிப்பதைப் பார்த்திருக் கிறீர்களா? தன்னுடைய உணவான புழு பூச்சிகள் எப்படி வருமோ, எப்படி கிடைக்கு மோ, எந்த இடத்தில், எந்த நேரத்தில், என்ன ருசியில் என்றெல்லாம் நினைத்து கவலைப்பட்டு அலைவதை காண்கிறோமா? கடவுளே எனக்கு கூடுகட்டத் தேவையான வைக்கோல், சரியான உணவு, கிடைக்குமோ அல்லது கிடைக்காதா? கிடைக்காவிட்டால் என்ன செய்வேன் என்றெல்லாம் அலைபாயும் பறவையைப் பார்க்கிறோமா?

இயேசு கூறுகிறார், பறவைகளைப் பாருங்கள்! என்று. அவைகளுக்கு மனிதர்களைப் போல் நரம்புத் தளர்ச்சி ஏற்படுவதில்லை. ஒவ்வொரு நாள் காலையிலும் அவைகள்

புத்துணர்வுடன் பாட்டுப்பாடித் திரிகின்றன. நாம் அந்த பறவைகளை ஒரு மணி நேரம் நம் கவலைகளை நீக்கிவிட்டு தினமும் பார்க்க பழகினால் நமக்கு எவ்வளவு அமைதி கிடைக்குமென்று நினைத்துப் பார்க்கிறேன்.

## கவலையினால் சாதிக்க முடிந்தது என்ன?

கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?

மத்தேயு 6:27

உண்மையில் ஒருவராலும் முடியாது. ஆனால் நாம் கவலைப்படுவதையே ஓர் நிரந்தர வழக்கமாக்கிக் கொண்டால் நம் ஆயுளை நாமே குறைத்துக் கொண்டவர்களாவோம்.

கவலைப்படுவதை விட்டு, பறவைகளைப் போல் இயேசுவை முற்றிலும் சார்ந்து இருக்க வேண்டும். அவைகள் தம் உணவிற்காக கவலைப்படாமல், முழுதும் ஆண்டவரையே நம்பி கவலையில்லாமல் பாடித்திரிவதைப் போல் இருக்க தெரிந்து கொள்ள வேண்டும்.

## அல்லி மலரைப் பாருங்கள்

உடைக்காகவும், நீங்கள் கவலைப்படுகிற தென்ன?
காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளர்கிறதென்று
கவனித்துப் பாருங்கள். அவைகள்
உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை.

என்றாலும் சாலொமோன் முதலாய்த் தன் சர்வ
மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும்

உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித் தால் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

மத்தேயு 6:28-30

இயேசு என்ன கூறுகிறாரென்றால் அல்லி மலர்கள் தாங்கள் அழகாக காட்சி அளிக்க வேண்டுமென்பதற்காக உழைப்பதோ, கஷ்டப்படுவதோ இல்லை. கடவுளின் படைப்பிலே அவற்றை அப்படி அழகாக படைத்திருக்கிறார்.

இயேசுவே அப்படிப்பட்ட பறவைகளை யும், அல்லி மலர்களையும் அழகாயும், ஆனந்தமாயும் படைத்திருக்கையில் நாம் அவருக்கு அவற்றை விட குறைந்ததாகவா போய் விட்டோம்? அதிக கவலைகளில் ஆழ்ந்து போகாதீர்கள்.

## ழேந்தூபூபிரீணியட

ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்.

இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.

மத்தேயு 6:31,32

நாம் கவலைப்பட ஆரம்பித்ததும், நம்முடைய தெளிவான சிந்தனைகள் தடைப்பட்டு என்ன சாப்பிடுவது, என்ன பருகுவது, என்ன உடுப்பது என்று சர்வ சாதாரணமான விஷயங்களைப் பற்றியே திரும்ப திரும்ப பேசிப் பிதற்றுகிறோம். நம் மனதை அமைதிப்படுத்தி, கவலைகளை நீக்குவதில் அக்கறையில்லாமல் அரற்றி, ஆர்ப்பாட்டம் செய்வதினால் எந்த பயனுமில்லை. பரமண்டலத்திலுள்ள எங்கள் பிதா எங்களுக்கு இருக்கிறார், என்று நினைப்பவர்கள் யாரும் இப்படியாக நடந்து கொள்ள மாட்டார்கள். அவிசுவாசிகளுக்கு இயேசுவை எப்படி சார்ந்திருப்பது என்பது தெரியாது. ஆனால் நமக்கு அது தெரிந்திருக்க வேண்டும். நம்முடைய தேவைகளைப் பற்றி நாம் கேட்பதற்கு முன்பே பரமபிதாவிற்குப் தெரியுமென்று இயேசு நம்பிக்கை அளிக்கிறார். அப்படியிருக்கையில் நாம் எதற்காககவலை படுவது? அதற்கு பதிலாக நாம் நம்முடைய கவனத்தை தேவனுடையக் காரியங்களில் செலுத்துவோம்.

## முதலானவைகளை முதன்மையாக தேடு

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும்.

மத்தேயு 6:33

பல வருடங்கள் நான் என் கூட்டங்களில் பிரசங்கிக்கச் செல்லும் முன்பு மிகவும் படபடபாகி கவலைக்குட் பட்டு மேலும் கீழும் நடந்து கடவுளை வேண்டுவேன். அவரை உதவிக்கு அழைப்பேன். அதில் தவறேதுமில்லை. ஆயினும் நான் அவரிடம் வேண்டிக் கொண்டது அவர் மீதுள்ள நம்பிக்கையினால் அல்ல, என்னுடைய கவலையினால்தான்.

இப்போதெல்லாம் ஊழியத்திற்கு என்னை ஆயத்தம் செய்யும் போதெல்லாம் நான் படிக்க வேண்டியவற்றை நன்றாக படித்துவிட்டு, அமைதிகாத்து, பிரார்த்தனை செய்து ஆண்டவரை என்னுடன் ஒரு பாகஸ்தராக துணையிருக்கும்படி வேண்டுகிறேன்.

ஒருமுறை கூட பெருங்கூட்டமோ, காணிக்கைகளோ சேர்க்கும்படி அவர் என்னிடம் கூறியதில்லை. நான் செய்வ தெல்லாம் அவரை தேடுவது மட்டுமே. கூட்டம், காணிக்கைகள் தவிர மற்றவை எல்லாமே ஆண்டவன் கவனித்துக் கொள்கிறார்.

நாம் பெரும்பாலான நேரத்தை நம்முடைய பிரச்சனைகளுக்கு விடையளிக்கும்படி தேவனை வேண்டுகிறேமே தவிர, அவரை தேட நாம் நினைப்ப தில்லை.

நாம் தேவனைத் தேடும் வரை நாம் அவருடைய நிழலின் பாதுகாப்பில் இருக்கிறோம். "...அவருடைய செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்" சங் 91:4 அதைவிடுத்து பிரச்சனைகளுக்கு வழி தேடி கவலைப் படுவதும், மோசமான நிலைமைகளை சமாளிக்கவும், நம் எண்ணங்களை நிறைவேற்றவும் மட்டுமே அவரின் உதவியை நாடுகிறோம். அப்படிப்பட்ட நேரங்களில் நாம் அவருடைய பாதுகாப்பு நிழலிலிருந்து நீங்கி விடுகிறோம்.

பல வருடங்கள் நான் என் ஊழியத்தை பெரிதுபடுத்த வேண்டுமென்று பிரார்த்தனை செய்தேன். ஆனால் அது பெரிதாக வளரவேயில்லை. மாறாக பின்னடைவு ஏற்பட்டது. பிறகே நான் ஆண்டவரின் ராஜ்ஜியத்தை நாடி அவரிடம் வேண்டினால் ஊழியம் தானாகவே விரிவடையும் என்பதை புரிந்து கொண்டேன்.

நம்முடைய தெய்வீக ஞானம் வளர வேண்டிக் கூட அவரிடம் தனியாக நாம் பிரார்த்திக்க வேண்டியதில்லை.

அவரின் ராஜ்ஜியத்தையும், அவருடைய அருகாமை யையும், நிழலையும் நாடிப்போனால் போதும் நாம் வளருவோம். தேவனைத் தேடுங்கள் அவரில் நிலைத்திருங்கள் அவரே விருத்தியையும் வளர்ச்சியையும் கொடுப்பார்.

ஒரு குழந்தையானது எப்படி பாலைப் பருகி வளர்கின்றதோ அதுபோல் நாமும் பால் போன்ற அவரின் வார்த்தைகளை விருப்பத்துடன் வாசித்தோல் நாமும் வளர்ந்து முன்னேறுவோம். (1 பேது 2:2)

நம்முடைய சொந்த முயற்சியால் பெரும் வெற்றிகளை எந்த ஒரு விதத்திலும் அளந்து பார்க்க முடியாது. இயேசுவின் ராஜ்ஜியத் தையும் நீதியையும் தாம் நாடி தேடிப் போவோ மானால் மற்றவைகள் தானே நம்மை வந்தடையும். தேவனின் பரிசுகளையே நினைத்திராமல் அவரின் துணையையே நாட வேண்டும்.

## நிழலிலே சிறிது நேரம்

கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன். நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும் படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.

தீங்குநாளில் அவர் என்னை தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னை தமது கூடார மறைவிலே ஒளித்து வைத்து, என்னை கன்மலையின் மேல் உயர்த்துவார். இப்பொழுது என் தலை என்னைச்

சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும். அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு கர்த்தரைப்பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

சங்கீதம் 27:4-6

சில சமயங்களில் நாம் வாழ்க்கையை பின்நோக்கி வாழ்கிறோம். சில வருடங்களுக்கு முன்பு நான் அதையே தான் செய்து கொண்டிருந்தேன். ஊழியத்தைப் பெரிதாக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன். என்னில் எல்லாவிதமான மாற்றங்களும் ஏற்படவேண்டுமென்று விரும்பினேன். ஏனெனில் என்னை எனக்கு பிடிக்கவில்லை. என் கணவர் மாறவேண்டுமென்று விரும்பினேன். என் குழந்தைகள் மாற வேண்டுமென்று விரும்பினேன். நான் சுகம், செழிப்பு போன்றவற்றையும் விரும்பி யாசித்தேன். ஆண்டவரின் நிழலில் இருக்க நினைக்காமல் இந்த உலகிலுள்ள எல்லாவற்றையும் விரும்பி பெற நினைத்தேன்.

அது சமயம் தேவன் நடுவில் தோன்றி நான் செய்வது தவறு என்று உணர்த்தினாார். சங்கீதம் 27:4-6ல் இருப்பதை குறிப்பிட்டுக் காட்டினார். அதில் முதலாவதாக ஆண்டவனையும் அவரின் பிரசன்னத்தையும், நாம் விரும்பி யாசிக்க வேண்டும் என்பதையே கூறியிருந்தது. அந்த நேரத்தில் நான் ஆண்டவரின் பிரசன்னத்தைத் தவிர வேறு எல்லாவற்றையும் தேடிப் போய்க் கொண்டிருந்தேன். இருப்பினும் அவரை நான் தேடினபோது, அதுவே என்னுடைய விருப்பமென்பதை நான் உணர்ந்தேன். பின்பு கஷ்டங்கள் வந்தபோது அவர் என்னை தம்முடைய கூடார மறைவில் மறைத்துக் காத்துக்கொண்டார். என் எதிரி என்னை அழிக்க முயன்ற போது நான் சந்தோஷக்குரல் எழுப்பி இயேசுவின் புகழ் பாடினேன். ஸ்தோத்திரம் செய்தேன்.

நான் உன்னதமானவரின் மறைவிடத்திலிருந்ததால் பிசாசுவினால் என்னைத் தோற்கடிக்க முடியவில்லை. பிசாசு என்னை நெருங்க முடியாத உயரத்திலிருந்தேன். எதைப் பற்றியும் நினைத்து கவலையில் நெருங்காமல் நான் தேவனின் நிழலில் இருந்தமையால் சாத்தானால் கூட என்னை ஏதும் செய்ய முடியவில்லை.

## எதற்காகவும் கவலையுறாதே

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல்,
எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை
ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும்,
வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்.

அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ
சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள்
சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக்
காத்துக்கொள்ளும்.

பிலிப்பியர் 4:6,7

முன்பொரு சமயம் இயேசு என்னிடம் கூறினார், நாம் அவரிடம் ஜெபம் செய்யும் போது, பிசாசு எனக்கு என்னவெல்லாம் தர நினைக்கிறதோ அவற்றையெல்லாம் தன்னிடம் கொடுத்து விடும்படியாகக் கூறினார்.

அதுவே நம்முடைய பிரார்த்தனையாகும். பிசாசு நமக்கு பிரச்சனைகளைத் தரும்போது “தேவனே இதை என்னால் தாங்க முடியாது, இதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்” என்று இயேசுவிடம் கூறவேண்டும்.

பிலிப்பியர் 4:6,7ல் அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு சுருக்கமாகக் கூறுகிறார், பிரார்த்தனை செய்து விட்டு

கவலைப்படாமலிரு என்று. அவர் பிரார்த்தனை செய்து கவலைப்படு என்று கூறவில்லை. நாம் பிரார்த்தனை செய்து நம் கவலைகளை நீக்கி விட்டாலோ நாம் கடவுளை முற்றிலும் நம்புகிறோம் என்பதாகிறது. அதுவே உண்மையான பிரார்த்தனையாகும்.

நான் பல சமயங்களில் அதுபோலவே செய்திருக்கிறேன். ஊழியத்தினிமித்தம் நானும் என் கணவரும் பல சமயங்களில் வெளியூர் போக நேரும். அப்போதெல்லாம் எங்கள் மகன் டேனியைத் தனியே வீட்டில் விட்டுச் செல்வோம். அவன் ஒரு சமயம் தொலைபேசியில் பேசியபோது பள்ளியில் அவனுக்கு ஏற்பட்ட தொல்லை பற்றியும், நாங்கள் அங்கு இல்லாத நேரத்தில் காலையில் படுக்கையிலிருந்து எழும்பும் போதும் முன்பும், இரவு தூங்கும் முன்பும் எங்களை அவன் தேடினான் என்றும் கூறினான்.

எனக்கும், டேவ்வுக்கும் எங்கள் மகன்மேல் மிகுந்த பிரியமுண்டு. நாங்கள் அவனை நேசிக்கிறோம். அவனும் எங்களை மிகவும் நேசிக்கிறான். அவனே எங்களின் கடைசிக் குழந்தை, எங்களுக்கு அவனைப் பற்றிய அக்கறையும், கவலையும் உண்டு. உயர் நிலைப் பள்ளியில் அவன் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும், அதனால் ஏற்படும் பலன்களும், எங்களுக்குக் கவலையளித்துக் கொண்டிருந்தன.

நம் எல்லோருக்கும் தினசரி சமாளிக்க வேண்டிய பலவித தொல்லைகளும், கவலைகளும் உண்டு. அதற்காக நாம் அதிலேயே அமிழ்ந்து போய் சுயபச் சாபத்துடன் தலையை கவிழ்த்துக் கொண்டு, வாழ்க்கையில் ஏதும் சரியில்லையென்று சதா நினைத்துக் கொண்டிருப்பதால் யாதொரு பயனுமில்லை. நாம் நம் கவனத்தை வேறுபக்கம் செலுத்தி வேதத்தில் கூறியுள்ளது போல் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

நாங்கள் வெளியூர் போன சமயங்களில் எல்லாம் டேனியைப் பற்றி நான் கவலையுறத் தொடங்கிய உடனே இப்படியாக பிரார்த்தனை செய்வேன்.

பரமபிதாவே! நீங்கள் டேனியை கவனித்துக் கொள்வதற்கு நன்றி. அவனுடைய வாழ்க்கைக்கு ஒரு நல்ல வழி வைத்திருக் கிறீர்கள் என்பதற்கும் மிக்க நன்றி. நீங்கள் அவனின் ஒவ்வொரு செயலையும் கவனித்து அதுசரிவர நடக்கவும் வழி செய்து வருகிறீர்கள். அதற்காகவும் மிக்க நன்றி. உங்கள் திருக்குமாரன் இயேசுவின் இரத்தத்தால் அவன் காப்பாற்றப்படுகிறான் என்பதற்கும் நன்றி.

நாம் இப்படியாக தேவனிடம்ஜெபிக்கும் போது தொழும்போது பிசாசு நம்மைவிட்டு போய்விடுவான். நாம் இயேசுவை உறுதியாக நம்பும்படியாகவும் தேவன் செய்து விடுவார்.

## நேர்மறையாக இரு

ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப் படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்.
சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.

அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத் தில் எதையாகிலும் பெறலாமென்று நினையா திருப்பானாக.

யாக்கோபு 1:6,7

நாம் நம்முடைய கவலைகளை ஆண்டவரிடம் பிரார்த்தனை மூலம் கூறிவிட்டு அவர் பொறுப்பில் விட்டு விடுவதில்லை. மாறாக நாமும் அதே நினைப்பில் இருக்கிறோம். அப்படி

செய்வதன் மூலம் ஆம் என்பதும் இல்லை என்பதும் போன்று நேர்மறை, எதிர்மறை இரண்டு விளைவுகளும் ஏற்பட்டு மோதுகிறது. அதன் பயனான விளைவு பூஜ்யம் தவிர வேறில்லை.

உங்களைப் பற்றி நான் அறியேன் ஆனால் எனக்கு வல்லமை பூஜ்ஜியமாக இருக்க நான் விரும்பவில்லை, எனவே நான் ஜெபத்தையும், கவலையையும் சேர்ப்பதில்லை. இயேசு என்னிடம் ஒரு முறை கூறினார். மக்கள் நேர்மறை, எதிர்மறை விளைவுகளை ஒன்றாகக் கலப்பதால் ஏதும் பயனில்லாமல் போகிறதென்று. ஒரு நிமிடம் நேர்மறை ஒப்புதலும், அடுத்தகணம் கவலையும், ஒருகணம் நம்பிக்கையும் அடுத்த கணம் அவநம்பிக்கையும் கொண்டு பலவித அலைக்கழிப்புக்கு உள்ளாகிறீர்கள். இப்படி செய்வதனால் சரியான பலன் ஏதும் கிடைப்பதில்லை.

நாம் இயேசுவையே உறுதியாக நம்புவோம். கவலைகளை அறவே நீக்குவோம் என்று ஓர் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும்.

# 3

# எல்லாமே சரியாகிவிடும்

இரண்டாவது வழிக்கல்லில் பீதிகளைப் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதில் பயந்து பீதியடையாதீர்கள் என்றும் முதல் வழிக் கல்லில் உள்ள கவலையை விடுங்கள், கடவுளை நம்புங்கள் என்பது போன்றது தான். ஆனால் முந்தியதைவிட இந்த இரண்டாவது எச்சரிக்கையை கீழ்ப்படியாமல் போவதில் உள்ள ஆபத்து அதிகம். இதில் பள்ளத்தில் விழுவது போலல்லாமல் நேருக்கு நேர் மோதிக்கொள்ளும் அபாயம் உண்டு.

பீதியென்பது கவலையை விடவும் மோசமான ஓர் உணர்வு. நம் பிரச்சனை முடிந்து போன பின்பும் மனதைக் குடைந்து கொண்டேயிருக்கும். கவலையை விடவும் இரண்டு மங்கானது பீதி. அதிலேயே ஆழ்ந்து போவோமானால் நம்பிக்கையிழந்து முற்றிலும் பயத்தால் சூழப்பட்டு விடுவோம். நாளையைப் பற்றிய பயம், தெரியாதவைப் பற்றிய பயம் என்று பீதியின் உச்சத்தை அடைகிறோம்.

## பீதியின் அடையாளம்

மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை
ஒடுக்கும், நல்வார்த்தையோ அதை மகிழ்ச்சியாக்கும்.

நீதிமொழிகள் 12:25

பீதியானது ஒரு மனிதனின் வாழ்வில் பெரும் பளுவைத் தருகிறது. அகராதியில் பீதிக்கு ஒரு தவிக்கும் நிலை, எதிர்காலம் பற்றி பயப்படுதல் அல்லது கவலையு றுதல்... என்றெல்லாம் பொருள் கூறப்பட்டுள்ளது.

சில நேரங்களில் நம் தவிப்பு எதற்காக என்பதும், குறிப்பாக எந்த ஓர் விஷயத்தி னால் என்பதும் தெரிவதில்லை. அதன் காரணம் தெரியாவிடினும் கூட தொடர்ந்து அந்த தவிப்பு நீடிக்கிறது. நடக்கப்போவ தைப் பற்றி நிச்சயமில்லாத ஒரு தவிப்பு, மனதின் அரிப்பு, இவை தொடர்கின்றன. இந்த விதமான பயம் பீதியை விடவும் மோசமானது.

இதுபோன்ற அனுபவம் என் வாழ்க்கை யில் பலமுறை நான் அனுபவித்துள்ளேன். பிறகு ஒரு கட்டத்தில் கெடுதலான சம்பவங்கள் நேர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கவே துவங்கினேன். ஆண்டவர் எனக்கு தெரிவிக்கும் வரையில் என்னுடைய அனுபவம் எனக்கு புரியாமலேயிருந்தது.

## தீங்கு செய்யாமை

சிறுமைப்பட்டவனுடைய நாட்களெல் லாம்
தீங்குள்ளவைகள், மனரம்மியமோ நித்திய விருந்து.

நீதிமொழிகள் 15:15

ஒருநாள் காலையில் நான் தலைசீவிக் கொண்டிருந்தேன். அதுசமயம் எனக்கு ஏதோ ஒரு கெடுதல் ஏற்படப்போகிறது என்ற ஒருவித பயம் மனதில் தோன்றியது. அப்போது அது என்னவென்று எனக்கு புரியவில்லை. ஏனெனில் நான் சில நாட்களாக வேதம் வாசித்துக்கொண்டு பரிசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப் பட்டிருந்தேன். ஆனாலும் ஒருவித பயம் ஏற்பட்டதை உணர்ந்தேன்.

நான் ஆண்டவரிடம் இதுபற்றி கேட்டபோது அவர் சொன்னார். அது ஏதோ கெடுதல் சம்பவிக்கும் என்ற பயப்பிராந்தியென்று. அந்த மாதிரி ஏதும் நான் அதுவரையில் கேள்விப்பட்டதேயில்லை யென்பதால் அதன் அர்த்தம் புரியாமல் அகராதியில் தேடினேன். உடனேயே நடக்கும் சம்பவங்களல்லாமல், எதிர் காலத்தில் ஏதோ கெடுதல் சம்பவிக்கும் என்று எண்ணும் பயப்பிராந்தியே அது வென்று புரிந்தது. வேதாகமத்தில் நீதிமொழிகள் 15:15ல் பீதிகலந்த எண்ணங்களும், கெடுதல் நேரும் என்ற எதிர்மறை எண்ணங்களும் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இயேசு நாம் இப்படிப்பட்ட எண்ணங் களைக் களைந்து மகிழ்ச்சியான வாழ்வு வாழ வேண்டுமென்கிறார். ஆனால் அது அவ்வளவு சுலபமானதல்ல. ஏனெனில் நம் எதிரியான சாத்தானோ நமக்கு எதுவும் நன்மையானது நடக்காதென்பதையே நாம் நம்ப வேண்டுமென்று விரும்புகிறான். அவனுக்கு நாம் தவறாக புரிந்து கொள்ளுத லும், ஒருவரையொருவர் கேவலப்படுத்திக் கொள்வதும், எப்போதும் தேவையற்ற விஷயங்களுக்குக் கவலைப்படுவதுமே விருப்பமானது. இப்படிப்பட்டவைகளால் நாம் சூழப்படுவோமேயானால் ஆண்டவரிட மிருந்து விலகிப்போய் அவர் நமக்கு வைத்திருக்கும் கடமையைச் செய்ய தவறி விடுவோம்.

பீதியென்ற வார்த்தைக்கு உள்ள அர்த்தம் கவலை, நிச்சயமற்ற தன்மை பற்றிய பயம், போன்றவைகள் யாவும் மேற்கூறியவற்றை உறுதிபடுத்துகிறது.

## நீங்கள் மீட்கப்பட்டிருந்தால் அதைச் சொல்லுங்கள்!

கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி
மீட்கப்பட்டு, கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும்,
தெற்கிலுள்ள பல தேசங்களிலுமிருந்து
சேர்க்கப்பட்டவர்கள், அப்படிச் சொல்லக்கடவர்கள்.

சங்கீதம் 107:2

சாத்தான் உங்களின் எண்ணங்களைச் சிதறடிக்கவே முயற்சி செய்கிறான் என்று புரிந்து கொண்டவுடன் அவன் உங்களை கவலைகளாலும், எதிர்மறை எண்ணங் களாலும் மூழ்கடிக்காமல் தடைசெய்யுங்கள். நீங்கள் வாய்திறந்து அவனுக்கு பிடிக்காதவற்றைப் பற்றி பேசுங்கள், அவன் உங்களை விட்டுவிடுவான். கிறிஸ்துவுக்குள் உங்களுக்கிருக்கும் அதிகாரத்தை அறிக்கையிடுங்கள்.

சில சமயங்களில் கோயிலில் நான் பேசத்துவங்கும் போது பலவிதமான எதிர்மறை எண்ணங்கள் என் மனதில் வந்து குவியும்.

ஒரு சமயம் ஆலயத்தி பெண்களுக்கான ஓர் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நான் என் உதவியாளரிடம் அதுபற்றி விசாரித்த போது அதிகம் பேர் பதிவு செய்யவில்லை யென்று கூறினார். கூட்டம் ஏற்பாடு செய்தவர்கள் முந்தின வருடம் வந்த அளவு கூட்டம் வருமென்று எதிர்பார்த் திருந்தார்கள்.

நான் திடீரென்று அதுபற்றி கவலைப்பட ஆரம்பித்தேன். யாருமே வராமல் போனால் என்ன செய்வது? நானும், குழுவினரும் பிரயாணம் செய்தும் ஏதொரு பயனுமில்லாமல் போய்விடுமோ என்றெல் லாம் கவலைப்பட்டேன். பிறகு எனக்குள் நானே வாய்விட்டு தைரியமாய் பேசிக் கொண்டேன். எல்லாமே சரியாகத்தான் நடக்கும் என்று. இப்படி சத்தமாக பேசி அந்த கெடுதலான எதிர்மறை சிந்தனைகளை விரட்டியடிக்க வேண்டியிருக்கிறது. இல்லையெனில் அவை நம்மிடமே தங்கி கவலையையும், பீதியையும் கொடக்கும்.

நான் இப்படிப்பட்ட எதிர்மறை எண்ணங் களையும், கவலைகளையும், புரிந்து கொண்ட பின்பு, அவற்றின் மேல் அதிகாரம் எடுத்துக் கொண்டபோது ஆண்டவர் என் வாழ்வில் சில விடுதலைகளைக் கொடுக்கத் தொடங்கினார். அதனால் நான் வாழ்வில் மகிழ்ச்சியடைந்தேன்.

சாத்தான் வேண்டுமென்றே நம் மனதில் தீய எதிர்மறை நினைவுகளையும், அதிக கவலைகளையும் போட்டு நிரப்பி விடுகிறான். நாம் அவற்றைப் பெற்றுக் கொண்டு நம் வார்தைகளால் சொல்லத் தொடங்குவோமென்று அவன் நம்புகிறான். நாம் அப்படி செய்யும் போது, அத்தகைய கவலையான எண்ணங்களை ஏற்படுத்திய அந்த சூழ்நிலையை அவனால் நம் வாழ்வில் ஏற்படுத்த முடியும். வார்த்தைகளுக்கு உறுவாக்கு வல்லமை ஆவிக்குரிய உலகில் இருக்கிறதென்பதாக என்பதால் நாம் கவலையான எதிர்மறைச் சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென் றே அவன் அப்படிச் செய்கிறான். ஆதியாக மம் 1:3 கூறுகிறது, தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று!

இயேசு கூறுகிறார், ஆகை யால் என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம், என்று கவலைப்படாதிருங்கள். (மத்தேயு 6:31) நாம் எதிர்மறை எண்ணங்களை வாய்விட் டுச் சொல்ல முற்பட்டால் அதுவே உண்மையான பிரச்சனைக்கும் வழிவகுக்கும்.

நாளைக்காக கவலைப்படாதிருங்கள், நாளைய தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும். (மத்தேயு 6:34)

## வாழ்க்கையை அனுபவியுங்கள்!

அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும்
அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில்
மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு
அலங்காரமாயிருக்கக் கடவது, அதுவே தேவனுடைய
பார்வையில் விலையேறப் பெற்றது.

1 பேதுரு 3:4

அதிக கவலையென்பதற்கு மற்றொரு பொருள் அக்கறை. அதன் காரணமாய் உண்டாகும் கவலையென்றாகும். அல்லது கரிசனை அல்லது மனக் கலக்கம், சாந்த மற்ற நிலை என்றும் பொருள்படும். நாம் அதிக கவலைக்குட்படும் போது வயிற்றில் ஒருவித சங்கடத்தை உணர்கின்றோம். எல்லாமே பெரும் பளுச்சுமையாக தோன்றுகிறது. அந்த சமயம் மனம் விட்டு அமைதியும், சந்தோஷமும் அனுபவிக்க முடிவதில்லை.

என்னைப் பற்றி கூறும்போது, நான் எப்போதும் கவலையுடனும், வருத்தத்துடனு மேயிருந்தேன். இளவயதில் நான் பல கஷ்டங்களுக்கு உள்ளானதால் சிறுபிள் ளைத் தனம்

என்பதையே இழந்து எப்போதும் பெரியவள் போன்றே உணர்ந்தேன். குழந்தைத்தனம் என்பது என்னிடம் அறவே இல்லாமல் போனது. நான் சிறுபிள்ளையாக இருக்க இயலாமலிருந்ததால் கவலையற்று சிறுப்பிள்ளைத்தனமாக இருப்பதை அறியாதவளாக இருந்தேன். எனக்கு திருமண மானதும் குழந்தைகள் பிறந்தபோதும் கூட அவர்களை முழுமையாக என்னால் ரசித்து அனுபவிக்க முடியவில்லை. பல வருடங்கள் என் கணவருடன் நான் மகிழ்ச்சியாயிருந்த தில்லை. ஏனென்றால் நான் எப்போதும் அவரை மாற்றுவதிலேயே குறியாயிருந் தேன். குழந்தைகள் பிறந்தபோதும் நான் அவர்களுக்கு செய்ய வேண்டிய தினசரி கடமைகளில் குறியாயிருந்தேனே தவிர, அவர்களுடன் சிரித்து விளையாடி கழிக்க முடியவில்லை. அவர்களை மிகவும் நேசித்தேன். ஆனாலும் எல்லாவற்றிலும் ஓர் அளவிற்கதிகமாக ஒழுங்கை எதிர்பார்த்தேன். ஓர் நல்ல வீடும் உண்டு. அதையும் கூட மகிழ்ச்சியாய் அனுபவித்தேன் என்பதைவிட எப்போதும் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தி பார்த்துக் கொண்டேன் என்பதே உண்மையாகும்.

குழந்தைகளிடம் பலவித விளையாட்டுச் சாமான்கள் இருந்தன. இருப்பினும் அவற்றை கண்டபடி இரைத்து விளையாட நான் அனுமதித்ததில்லை.

கேளிக்கையென் றால் எனக்கு என்னவென்றே தெரியாது. தினசரி வேலைகளை ஒழுங்காக சரிவர செய்வதென்பதே எனக்கு தெரிந்த விஷயம். ஒழுங்கு கெடாமல் இருக்க வேண்டுமென் பதற்காக குழந்தைகளையும் அடிக்கடி வெளியில் போய் விளையாடும்படி கூறுவேன். இப்படியாக எப்போதும் ஒருவித கட்டுப்பாட்டில் எதிலும் களிப்பு இல்லாமல் ஒழுங்கு

ஒன்றே முக்கியமென்று நினைத்து வாழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

நான் நினைத்தபடியே எது ஒன்றும் நடக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதையும் புரிந்து கொண்டேன். பிறகே புரிந்தது ஒழுங்கும், கட்டுப்பாடும் மட்டுமே வாழ்க்கையல்ல. வாழ்க்கையில் அனுபவித்து அமைதிகாத்து மகிழ்ச்சியுடன் இருக்க பழக வேண்டு மென்பது. வேதாகமம் கூறுகிறது. சங்கீதம் 118:34 இது கர்த்தர் உண்டு பண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.

யோவான் 16:33ல் இயேசு கூறுகிறார். என்னிடததில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.

பிலிப்பியர் 4:4 பரிசுத்த பவுல் கூறுகிறார், கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமா யிருங்கள், சந்தோஷமாயிருங் கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்!

அதிக சுமையில் அழுத்தப்படாதீர்கள். மனதை இலேசாக்கிக் கொள்ளுங்கள். தேவனுக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள். வாழ்க்கையை மகிழ்வுடன் கழிக்க ஓர் முடிவு செய்யுங்கள்.

## மகிமையிலிருந்து மகிமை

நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய
மகிமையைக் கண்ணாடியி லே காண்கிறது போலக்
கண்டு, ஆவியாயி ருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத்

தானே மகிமையின் மேல் மகிமையடைந்து
மறுரூபப்படுகிறோம்.

2 கொரி 3:18

எல்லாம் ஒரு ஒழுங்கிலும், சீரான முறையிலும் இருந்தால் மட்டுமே நாம் வாழ்க்கையில் மகிழ்வுடன் இருக்க முடியும் என்று நினைத்தால், அதுபோன்ற சந்தர்ப்பம் கிடைக்கவே கிடைக்காது என்பதைத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

உங்களைச் சுற்றியுள்ள எல்லா மனிதர்களும், எல்லா பொருட்களும் சீராக, ஒழுங்காக இருக்க வேண்டும் என்று காத்திருக்கும் தவறை செய்யாதீர்கள்.

தேவன் நம்மை அவருடைய உருவத்திற் கும், மகிமைக்கும் மாற்றிக் கொண்டேயிருக்கிறார், என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. அப்படியெனில் நாம் ஒவ்வொரு கட்டத்தையும் அதிலிருக்கும் போதும் அடுத்ததற்கு மாறிக் கொண்டிருக்கும் போதும் ரசித்து அனுபவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இயேசுவே, நான் எங்கு இருக்கவேண்டுமோ அங்கே இல்லாவி டிலும் நான் இருந்த பழைய இடத்திலேயே இருந்து கொண்டிராமல், இடையில் ஒரு இடத்தில் இருப்பதற்காகவும், அதை நான் அனுபவிக்கப் போவதற்குமாக உங்களுக்கு நன்றி என்று கூற பழக வேண்டும்.

சிறு குழந்தைகள் பிறந்து வளர்ந்து வரும்போது ஒவ்வொரு பருவத்திலும் அழகாக பார்த்து மகிழக்கூடிய விஷயங்களும் உண்டு. கஷ்டமான நேரங்களும் உண்டு. நாம் அவர்கள் அந்த கட்டத்திலிருந்து எப்போது அடுத்த கட்டத்துக்குப் போவார்கள் என்றே எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். அவர்கள் சிறு குழந்தையிலிருந்து வளர்ந்து பள்ளிக்கு செல்ல வேண்டுமென்று

நினைக்கிறோம். அந்த சமயம் அவர்கள் பேசும் மழலை மொழிகளை ரசிக்காமல் அவர்கள் செய்யும் குறும்புகளைத் தவிர்த்து அவர்கள் பெரியவர்களாகி உயர் கல்வி கூடங்களுக்கு எப்போது செல்வார்கள் என ஏங்குகிறோம். அந்த நிலை எட்டியதும் எப்போதும் அவர்கள் உயர்கல்வி முடித்து உத்தியோகத்தில் சேர்ந்து மணமுடிப்பார்கள் என்று நினைக்கிறோம். அதுவும் ஒருநாள் நடந்து முடிகிற போது நானும் பிள்ளை வளரும் போது எந்த பருவத்திலும் எதையும் அனுபவிக்காமல் அடுத்த கட்டம் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பிலேயே காலம் கழித்து விட்டதை உணர்கின்றோம். எது ஒன்றும் அது இருக்கும் போது அனுபவிக் காமல் மற்றொன்றிற்காக காத்துக் கொண்டிருப்பதே என் வாழ்க்கையாகிப் போனது.

நான் பிரார்த்தனை கூட்டங்கள் நடத்தும் போதும் ஐம்பது பேர்கள் வந்தபொழுது நூறு பேர்கள் வந்தால் நன்றாகயிருக்குமென்று நினைத்துக் கொள்வேன். உண்மையில் நூறு பேர்கள் வரும்போது அதில் ஒன்றும் அதிக சந்தோஷம் கிடைக்கவில்லை.

ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு விஷயமும் ஓரளவு மகிழ்ச்சி, ஓரளவு பிரச்சனைகள் என் கூட்டாகவே ஏற்படுகிறது. அதனால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நாம் மகிழ்ச்சியுடன் இருக்கவே பழகிக் கொள்ள வேண்டும்.

## எந்த சந்தர்ப்பத்திலும் மகிழ்ச்சியுடனிருங்கள்

**கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை**
**மகிழ்ச்சியாக்கினீர், உமது கரத்தின் கிரியை**

களினிமித்தம் ஆனந்த சத்தமிடுவேன்.

சங்கீதம் 92:4

சில வருடங்களுக்கு முன்பு நான் மகிழ்ச்சிப் பாதையின் கதவுகளைக் கண்டு பிடித்தேன். அது தேவனின் பிரசன்னத்திலிருக்கிறது.

எனக்குத் தேவையானதையே தேவனும் எனக்காக செய்தபோது நான் மகிழ்ச்சி யடைந்தேன். ஆனால் அவர்நிமித்தம் எவ்வாறு சந்தோஷமாக இருப்பது என்பதை அறியாதவளாக இருந்தேன். அவருடைய கையைத் தேடிப்பெற்றேன். அவரின் முகத்தை நாடும் வழி தெரியவில்லை.

இயேசு நமக்காக ஒரு காரியத்தை செய்தாரென்றால் உடனே நாம் அதற்காக மகிழ்ச்சியடைந்துவிடுவதில்லை. மாறாக அடுத்ததும் நம் விருப்பம் போல் அவர் நடத்த வேண்டுமென்று நினைக்கிறோம். அதுவும் நம் எண்ணப்படி நடந்தாலும் இன்னொன்றை தயாராக முடிப்பதற்காக வைத்திருப்போம். இப்படி அடுத்தடுத்து நமக்கு சாதகமாக எதுவும் நடைபெற்றாலே நாம் மகிழ்ச்சியா யிருப்போமென்று நினைத்தால் அது சாத்தியமேயில்லாமல் போகும். வாழ்க்கை முழுதும் அப்படியொரு சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்து வீணாகிப் போகும். மகிழ்ச்சியடைய ஒரு சந்தர்ப்பம் கிடைக்காமலே போகலாம்.

ஒருநாள் நான் என்னுடைய மகிழ்ச்சியில் தேவனின் ஒரு பாடலைப் பாடிக் கொண்டிருந்தேன். நீர் என்னை மகிழ்ச்சி யடையச் செய்தீர் தேவனே என்ற பாடலேயாகும். அப்போது பரிசுத்த ஆவியானவரின் குரல் கேட்டது, இப்போது தான் முதன் முறையாக இந்த பாடலை நீ பாடுகிறாயல்லவா என்று கேட்டது.

தேவன் பெரும்பாலும் நம் வார்த்தைகளைக் கேட்டதில்லை, அவர் நம்முடைய மனதில் குரலையே கேட்கிறார். எனக்காக நீர் செய்த காரியங்களால் நான் மகிழ்ச்சியடைந்தேன் என்று பாடிக் கொண்டிருந்தேன்.

அவர் நான் நினைத்ததையே எனக்காக செய்து முடிக்கும் போது நான் திருப்தியடைந்தேன். அவர் எனக்கு தேவையானதை செய்யாதபோது நான் மகிழ்ச்சியடையவில்லை. இப்படியாக என் மனநிலை மேலும், கீழும், முன்பும் பின்புமாக மாறிமாறி செயல்பட்டுக் கொண்டிருந்தது. என் சந்தர்ப்பங்கள் எனக்குச் சாதகமாக உள்ளபோது சரியாகவும், அப்படியில்லாதபோது சங்கடமாகவும் இருந்து வந்தேன்.

நாம் முழுமையான மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமெனில் சந்தர்ப்பங்கள் எவ்வாறு யிருந்தாலும் மகிழ்ச்சியுடனிருக்க வேண்டும்.

## மனிதர்கள் எப்படியிருந்தாலும் நீ மகிழ்வுடனிரு

நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களி கூறுங்கள்,
செம்மையான இருதயமுள்ள வர்களே, நீங்கள்
எல்லாரும் ஆனந்த முழக்கமிடுங்கள்.

சங்கீதம் 32:11

அப்படியே ஒரு வேளை சந்தர்ப்பங்கள் நமக்கு சாதகமானதாக அமைந்தாலும், உலகத்தில் பலர் நமக்கு ஒத்துப் போகாதவர்களாக இருப்பதை உணர்கிறோம். நாம் ஒருவரை சரிக்கட்டி முடித்து திரும்பிப் பார்க்கையில் ஒத்துப்போகாத மற்றொரு மனிதர் தென்படுகிறார். பிறகு மற்றொருவர் என்று

இப்படி இது ஒரு தொடர் சங்கிலியாகவே போய்க் கொண்டிருக்கும்.

எங்களுடைய ஊழியத்தில் வேலைப் பார்ப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் மிகமிக நல்லவர்களேயாயினும் சில சமயங்களில் அவர்கள் எனக்கு மிக்க திருப்தியளிப்பதில்லை.

நாம் கிறிஸ்தவர்களின் கூட்டத்திலேயே இருந்தாலும் கூட எல்லா சமயங்களிலும் நமக்கு திருப்தி கிடைப்பதில்லை. எல்லா நேரங்களிலும் நமக்கு மகிழ்ச்சியும், திருப்தியுமளிப்பவர் இயேசு ஒருவரே. அவரும் கூட நாம் அவரை அனுமதிக்கும்போதே அப்படி செய்ய முடியும்.

## மார்த்தாளின் மன நிலை

பின்பு அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர் கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள்.

அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள். அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னைவிட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்.

லூக்கா 10:38-40

அமைதி, திருப்தி, மகிழ்ச்சி இவையெல் லாம் எங்கிருந்து கிடைக்குமென்பது மார்த்தாளின் சிறிய சகோதரியான மரியாளுக் குத் தெரிந்தது போல் வேறெருவர்க்கும் தெரியாது. அவர்கள் வீட்டிற்கு இயேசு வந்தபோது, அவர் காலடியில் அமர்ந்தாள். அவர் கூறுவதை ஒன்றுவிடாமல் கவனத் துடன் கேட்க முடியுமென்று மரியாளுக்குத் தெரிந்திருந்தது. அவளுக்கு இயேசு தங்கள் வீட்டிற்கு வரப்போவது குறித்து ஆச்சரியமும் மகிழ்ச்சியுமாய் இருந்தது. அவள் கீழே உட்கார்ந்து கண்களை அவர் மீது பதித்தாள்.

அவள் சகோதரி மார்த்தாளோ நாள் முழுவதும் சுத்தம் செய்து வீட்டை மெருகேற்றுவதிலும், சமைப்பதிலும், இயேசுவின் வரவிற்குத் தேவையானவற்றை எடுத்து வைப்பதிலும் கழித்தாள்.

(என்னால் மார்த்தாளை நன்கு கற்பனையில் காண முடியும், ஏனென்றால் நானும் அதுபோன்ற சமயங்களில் அவளைப் போலவே நடந்து கொள்வேன்.)

அவர்களின் விருந்தாளி வருமுன்பாக எல்லாமே தயாராக வைக்க நினைத்தாள். இயேசு வந்தவுடன் சமையலறையில் உணவை சரிபார்ப்பதிலும், அதை மேசையில் ஒழுங்காக வைப்பதிலுமே கவனமாயிருந்தாள். கடைசியில் மார்த்தாள் பொறுமையிழந்து இயேசுவிடம் வந்து அவர் மரியாளை தனக்கு வேலைகளில் உதவும்படி கூற வேண்டுமென்று கூறினாள். அவரும் தன்னை கவனித்து பச்சாதாபப்படுவாரென்று நினைத்தாள். மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய், தேவையானது ஒன்றே. மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள், என்றார். லூக்கா 10:41,42 என்று கூறியபோது அவள் அதிர்ச்சியடைந்தாள்.

அவர் அப்படி கூறிய பின்பே வீடு அமைதியடைந்தது. உண்மையில் மார்த்தாளுக்கு இயேசுவின் வார்த்தைகள் தேவையானதாகவே இருந்தது.

எனக்கும் மார்த்தாள் செய்வதைப் போன்றே சந்தர்ப்பம் ஒருமுறை நேர்ந்திருக்கிறது. ஒருமுறை ஐந்தாறு நண்பர்களைச் சந்திக்க நேர்ந்தபோது திடீரென்று ஏற்பட்ட ஒரு உந்துதலில் அவர்களை ஞாயிற்றுக்கிழமை யன்று வீட்டிற்கு வரும்படி அழைத்தேன். ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள், உருளைக்கிழங்கு வறுவல், காப்பி, டீ போன்ற சுலபமான சாப்பாட்டுப் பொருட்களுடன் நாம் எல்லோரும் சேர்ந்து, சில விளையாட்டுகளும், வேடிக்கைப் பேச்சுகளுமாய் நேரம் கழிக்கலாம் என்று எண்ணினேன். அதன்பின்பு அதைப்பற்றி யோசித்து மகிழ்ந்தேன்.

சிறிது நேரம் கழிந்ததும் தின்பண்டங் களை மாற்றினேன். ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட உணவு பொருட்களை வாங்கு வதை விட வீட்டில் நானே தயாரித்தால் நன்றாயிருக்கு மென்று எண்ணத் தொடங்கினேன். பிறகு வீட்டை ஒட்டு மொத்தமாக சுத்தம் செய்யவும், வெளியில் கிடந்த மேசை, நாற்காலிகளை மாற்றி புதிதாக வாங்கவும் திட்டமிட்டேன். புல்வெளியையும் வெட்டி சுத்தம் செய்ய வேண்டுமென்று எண்ணினேன். வரும் என் நண்பர்களுக்கு என்னைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை உண்டு பண்ண வேண்டுமல்லவா!

சற்று நேரம் கழிந்த பின்பு இந்த ஐந்தாறு நண்பர்களை மட்டும் அழைத்திருப்பது தெரிந்தால் மற்ற நண்பர்கள் தவறாக நினைப்பார்களே என்றெண்ணி, மற்றவர் களையும் அழைக்க வேண்டுமென எண்ணினேன். கணக்கு பார்த்ததில் மொத்தம் பதினான்கு பேர்களானார்கள். திடீரென்று சிறியதாக தொடங்கிய

ஒரு விஷயம் மிகப் பெரியதாகி மாறி எனக்குள் பயத்தைத்தர துவங்கியது. மனிதர்களுக்கு உண்டாகும் பயம் என்ற சுமையில் மெதுவே ஆழ்ந்துக் கொண்டிருந்தேன்.

மார்த்தாளின் பயவெறி போன்றே நானும் பயத்தால் ஆட்கொள்ளப்பட்டேன். வெறியின் பாதிப்பால் வீட்டைச் சுத்தம் செய்ய முற்பட்டேன். எல்லோரையும் கடைகளுக்கு சென்று இதை வாங்கி வா, அதை வாங்கி வா என்று விரட்டியடித்தேன். பிறகு கோபத்தில் டேவ்விடமும் பிள்ளைகளிடத்திலும் சத்தம் போட்டேன். நான் ஒருத்தி மட்டுமே வேலை செய்ய வேண்டும், மற்றோரெல்லாம் மகிழ்ச்சியுற்று களிக்க வேண்டுமா? இது ஏதும் எனக்கு புரியவில்லையென்று கத்திக் கொண்டிருந் தேன். நானும் மார்த்தாளின் மனநிலையில் இருந்தேன். நான் சரியான விஷயத்தைத் தேர்ந்தெடுக்கவில்லை.

## நிகழ்காலத்தில் வாழ்வோம்

> பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய
> பிள்ளைகளாயிருக்கிறோம். இனி
> எவ்விதமாயிருப்போமென்று இன்னும்
> வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்
> படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம்
> அவரை தரிசிப்பதினால் அவருக்கு
> ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.
>
> 1 யோவான் 3:2

உண்மையில் இந்த கணத்தை நாம் மகிழ்ச்சியுடன் கழிக்கிறோமா அல்லது கவலையில் வீணாக்குகிறோமாள என்பதை இன்று நாம்தான் முடிவு செய்கிறோம். சில

சமயங்களில் நாளையைப் பற்றி கவலைப்படுவதால் இன்றைய மகிழ்ச்சியை இழக்கிறோம்.

பீதியும், பயமும் எதிர்காலத்தின் நிச்சயமற்ற தன்மையினால் ஏற்படுவதுதான். இயேசு அதற்கு கூறும் அர்த்தம் - எதிர் காலத்தில் நடக்கப் போவது பற்றியோ அல்லது ஏற்கனவே நடந்து முடிந்தது பற்றியோ உணர்ச்சிவசப்பட்டு அதிகக் கவலைப்படுதல் என்பதேயாகும்.

நாம் இப்போது, தற்சமயம் மனிதர்களைப் போல இருப்பதையே இயேசு விரும்புகிறார். அதையே நாம் கற்றுக் கொள்ள வேண்டும். உதாரணத்துக்கு 2 கொரிந்தியர் 6:2 கூறுகிறது, ...இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள் என்றும், எபிரேயர் 4:7 கூறுகிறது இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தா திருங்கள் என்று வெகு காலத்திற்குப் பின்பு, தாவீதின் சங்கீதத்தி லே சொல்லியிருக்கிற படி, இன்று என்று சொல்வதினாலே பின்னும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்.

நாம் இந்த நேரத்தில் வாழ கற்றுக் கொள்ள வேண்டும். பல நேரங்களில் கடந்த காலத்தைப் பற்றியே அல்லது எதிர் காலத்தைப் பற்றியோ சிந்திப்பதிலேயே கழிக்கிறோம். இந்த பழக்கத்தினால் எனக்கு பல பிரச்சனைகள் ஏற்பட்டன. நான் பல் துலக்கும் போது கூட இப்படிப்பட்ட கவலைச் சிந்தனையில் இருந்ததை ஆண்டவர் எனக்கு எடுத்துக் காட்டினார். பல் துலக்கிக் கொண்டிருக்கும்போதே அடுத்து செய்ய வேண்டியது, அதற்கடுத்து செய்ய வேண்டியதென்று ஒவ்வொன்றாக தொடர்ந்து வந்து என்னை அவசரத்திலாழ்த் தியது. கவலையும், அவசரமும் சேர்ந்து வயிற்றை இறுக்கிப் பிசைந்தது.

நாம் ஒரு காரியம் செய்து கொண்டிருக்கும் போது அதில் முழு மனதுடன் ஈடுபடாமல் அடுத்தடுத்த விஷயங்களில் மனது வேகமாகச் செல்லும்போதே நாம் பீதிக்கு ஆளாகிறோம். பல் துலக்குவதென்பது தினசரி நடக்கும் ஒரு சாதாரண விஷயமா யிருக்கலாம். ஆயினும் அதுவே நமக்கு பெரிய பிரச்சனையை உண்டு பண்ணலாம்.

நான் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்ட போது நிகழ்ந்தவை நினைவிலிருக்கிறது. என் மனம் பெரும்பாலான நேரங்களில் குழம்பி போயிருக்கிறது. சிறு விஷயங்கள் கூட குழப்பம் ஏற்படுத்தின. காலையில் எழுந்து என் மூன்று குழந்தைகளையும் பள்ளிக்குத் தயார் செய்து அனுப்பிவிட்டு, என் கணவரும் புறப்பட்டு வேலைக்குச் சென்ற பின்பு நான் அன்றைய தினம் செய்ய வேண்டிய வேலை பற்றி யோசிக்க வேண்டியிருக்கும். ஆனால் என் மனம் எதன்மேலும் பதியாது.

வீட்டு வேலைகள் செய்யும்போது கூட பல சமயங்களில் நான் எதையும் சரிவர முடிக்காமல் அரைகுறையில் விட்டிருப் பேன். படுக்கையறையில் விரிப்புகளை ஒழுங்கு செய்ய நினைத்து அங்கு போவேன். பாதியில் சமையல் பாத்திரங்கள் கழுவாமல் இருப்பது கவனத்துக்கு வந்து அங்கு ஓடுவேன். அதன் நடுவில் குளிர் சாதன பெட்டியிலிருந்து சமைக்கத் தேவையான வற்றை வெளியில் எடுத்து வைக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டு அந்த இடத்திற்கு ஓடுவேன். இடையில் அழுக்குத் துணிகள் கண்ணில் பட்டதும் உடனே துணிகளை துவைக்க மிஷினில் போட வேண்டுமென்று முடிவு செய்வேன். உடனே ஒருவருக்கு தொலைபேசியில் பேச வேண்டுமென்பதும் தபாலாபீஸ் சென்று

பணம் கட்டவேண்டு மென்பதும் எல்லாமாக ஒன்றாக வரிசையாக கவனத்தில் வரும். உடனே அவசரத்தில் வெளிவேலைகளை முடிக்க எண்ணி வெளியே ஓடுவேன்.

அந்த நாளின் முடிவில் பார்த்தபோது எந்த வேலையும் சரிவர செய்து முடிக்கப்படாமல் அரைகுறையில் நின்று போயிருக்கும். எனக்கும் ஒரே அலுப்பாகவும் வெறுப்பாகவும் இருக்கும். எதனால் அப்படியானதென்றால் நான் சரிவர எந்த ஒரு காரியத்தையும் தொடர்ந்து செய்து முடிக்கவில்லை யென்பதால் தான்.

## ஒரு நேரத்தில் ஒரேயொரு வேலை

நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக்
காத்துக்கொள். மூடர் பலியிடுவது போலப்
பலியிடுவதைப் பார்க்கிலும் செவி கொடுக்கச்
சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று
அறியாதிருக்கிறார்கள்.

பிரசங்கி 5:1

ஒரு நேரத்தில் ஒரேயொரு விஷயத்தை நாம் சரிவர செய்வதில்லை. ஏனெனில் நமக்கு அடுத்த விஷயத்தைப் பற்றிய அதிக கவலையேயாகும். நாம் பிரசங்கியில் சொல்லியிருப்பது போல் செய்ய வேண்டும். நம் கவனத்தை அந்த கணத்தில் நாம் செய்யும் வேலைமீது மட்டுமே வைக்க வேண்டும். நாம் அப்படி செய்யத் தவறினால் நாம் வாழ்க்கையில் நிதானத்தை இழந்து விடுவோம்.

நாம் கடந்த காலத்திலோ அல்லது எதிர் காலத்திலோ வாழாமல் நிகழ் காலத்தில் வாழவே தீர்மானம் செய்ய வேண்டும்.

நாம் அப்படி செய்ய தவறினால் ஆண்டவரின் அந்த நாளுக்குரிய அபிஷேகத்தை இழந்து விடுவோம். நாம் ஒரு நாளில் ஒரு விஷயத்தை மட்டுமே எடுத்துக்கொண்டால் அதை செவ்வனே செய்து முடிப்போம்.

நாம் இப்போது பொறுமையற்ற ஓர் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மந்திரக்கோல் கொண்டு ஒரே நிமிடத்தில் காரியத்தை முடிக்க நினைக்கிறோம். ஆனால் நிஜத்தில் அப்படி நடப்பதில்லை. தினத்துக்கு ஒன்றாகவே நிகழ்கிறது.

## ஒவ்வொரு நாள்

நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள். நாளையத்
தினம் தன்னுடையவைகளுக் காகக் கவலைப்படும்.
அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

மத்தேயு 6:34

அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகி றதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். யோவான் 8:58ல் இயேசு நான் இருக்கிறவராகவே இருக்கிறேன் என்று கூறுகிறார். இயேசு எப்போதுமே நிகழ் காலத்திலேயே இருப்பதால், அவருடைய சீஷர்களாகிய நீங்களும் நானும் கடந்த காலத்திலோ அல்லது நிகழ்காலத்திலோ வாழ முற்படுவோமென்றால், வாழ்க்கை கடினமாக மாறிவிடும். எனவே தான் அவர் நேற்றைப் பற்றியோ, நாளையைப் பற்றியோ கவலைப் படாதிருங்களென்று கூறினார். நாம் எதிர்காலத்திலே வாழ முற்படுவோமென்றால் அல்லது கடந்த காலத்திலோ, வாழ்க்கையானது கடினமாக மாறிவிடும், ஆனால் நாம் நிகழ்காலத்தில் வாழ்வோமென்றால் நாம் தேவனை

நம்முடன் பார்போம் நம் வாழ்க்கை எவ்விதம் இருந்தாலும் அவர் நம்மைவிட்டு விலகாமலும், நம்மை கைவிடாமலும் இருப்பார்.

நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவது மில்லை. (எபிரெயர் 13:5)

நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். (மத்தேயு 28:20)

நிகழ்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியால் பங்கு பெறுதல் என்பது நாம் அந்த இடத்தில் சரீரத்தால் இருப்பது மட்டுமல்ல, மனதாலும் உணர்ச்சிகளாலும்கூட ஈடுபட வேண்டும். உதாரணமாக, நாம் ஒரு இடத்தில் நின்று கொண்டிருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் மனத்திற்குள் அங்கில்லாத ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கலாம்.

மனதளவில் நம் சிந்தனைகள் வேறு இடத்திற்குப் போய்விடும்போது தேவையற்ற அழுத்தத்தை அது உண்டாக்குகிறது. சற்று நேரம் கழித்து நம்மை சுற்றிப் பார்க்கும்போது அங்கு என்ன நிகழ்ந்ததென்பதே தெரியாமலாகி விடுகிறது.

அதனால்தான் சாத்தான் எப்போதும் நம் எண்ணங்களை அலைக்கழித்து எங்கோ எடுத்துச் செல்கிறான். அப்போதுதான் நாம் நிகழ்வுகளை சரிவர புரிந்துக் கொள்ளாமல் தடுமாறி தவறுகள் செய்கிறோம். அதுவே அவனுக்குத் தேவையானது.

நான் என் கணவர் மீது கோபப்பட்ட ஒரு நிகழ்ச்சி நினைவில் வருகிறது. ஒருநாள் நான் அவரிடம் அதிக கோபமடைந்தேன். என் கோபம் சில தினங்கள் தொடரும். அப்படியிருந்த ஒரு தடவை டேவ் என்னிடம் கேட்டார் - இயேசு இன்றிரவு இங்கு வந்திருந்தாரானால் நீ உன்னுடைய நாளைக் கழித்த விதம் பார்த்து பரிதாபப்பட்டிருப் பாரல்லவா என்று கூறினார். அந்த வார்த்தைகள் என்னை யோசனைக் குள்ளாக்கியது.

இன்றையதினம் உள்ள காரியங்களை நாம் சரிவர செய்து முடித்தாலே போதும். நாளைய பற்றிய கவலை இன்று தேவையில்லை. அதுபோல் முடிந்துபோன நேற்றைய கவலைகளும் தேவையில்லை. தினமும் அடுத்தடுத்து வேலைகளும், தொல்லை களும், கவலைகளும் வந்து கொண்டே தானிருக்கும். ஆகையினால் வந்ததையும், வரப்போவதைப் பற்றியும் ஓயாமல் கவலைப் பட்டு நம் நேரத்தை வீணடிப்பது தேவையற்றது. பயமோ, பீதியோ, இல்லாமல் இன்றைய தினத்தை விசுவாசத்துடன் வாழ்வோம்.

# 4

# நம் எண்ணங்களை விட தேவனுடைய எண்ணங்கள்

நடக்கும் ஒவ்வொன்றையும் நீங்கள் அலசிப் பார்க்க முயற்சிக்கிறீர்களா? நம்மில் பலர் இந்த பள்ளத்தில் வீழ்ந்துள்ளோம். ஆண்டவர் மீது நம் கவனத்தை செலுத்து வதை விடுத்து நாம் ஒவ்வொரு செயலின் காரண காரியத்தை ஆராய முற்படுகிறோம்.

நாம் விஷயங்களை ஆராய முற்படும் போது நம்முடைய பகுத்தறிவை நம்முடைய வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டங்களுக்கும், எண்ணங்களுக்கும் மேலாக உயர்த்துகிறோம். அவருடைய வழிகளுக்கு மேலாக நம் வழிகளை வைக்கின்றோம்.

2 கொரி 10:5ல் நாம் "...எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயி ருக்வேண்டுடம்மென்று பார்க்கிறோம். மூன்றாவது திசைகாட்டியில் கூறப்பட்டுள்ள வாசகமானது உங்கள் கவலைகளை வைத்துவிட்டு பகுத்தறிதலை தவிர்த்துவிடுங்கள்" என்பதாகும். நாம் அதன்படி

நடப்போமானால் நாம் ஒவ்வொன்றையும் கவனித்தும், விளக்கம் தேடியும் அலைய வேண்டாம். மாறாக அவற்றையெல்லாம் நீக்கி தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் நுழைவோம்.

## தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசி

விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம். அவருடைய கிரியைகள் உலக தோற்றமுதல் முடிந்திருந்தும் இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை என்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்.

எபிரெயர் 4:3

இஸ்ரவேலின் பிள்ளைகள் பாலைவனத் தில் திரிந்து கொண்டிராமல் கானான் போய் சேர்ந்ததையே மேற்கண்ட வசனம் விளக்குகிறது. அதையே நம் வாழ்க்கையில் கடைபிடிக்கலாம். நாம் இளைப்பாறவில்லையென்றால் நமக்கு நம்பிக்கையும் இல்லை என்பதாகிறது. ஏனெனில் இளைப்பாறுவதே உண்மையான நம்பிக்கையின் பலன்.

சில சமயங்களில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்திற்கும் நான் காரணமும், விளக்கங்களும் தேட முற்படுவேன். நான் அப்படி செய்யும்போது நான் இயேசுவை விசுவாசிக்கவில்லையென்று தெரிகிறது. நீதிமொழிகள் 3:5 நமக்குக் கூறுகிறது.

உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு இதை மற்றொரு விதமாக கூறுவோமானால் கடவுளை விசுவாசி. நீ பார்ப்பதைக் கொண்டு எதையும் புரிந்து கொள்ள முயலாதே. எதையும்

இயேசுவின் மீது முழு விசுவாசத்துடன் புரிந்து கொள்ள முயற்சி செய் என்பதாகும்.

மனதில் விசுவாசமில்லாமல் வெரும் வாயால் மட்டுமே ஆண்டவரே உங்களை நான் விசுவாசிக்கிறேன் என்று சொல்லி விட்டு பிறகு நாமே புரிந்து கொள்ள முயல்வது பயனளிக்காது. கர்த்தரை உன் முழுமனதோடும் உன் முழு இருதயத்தோடும் நம்பு என்று நீதிமொழிகள் 3:5 கூறுகிறது. அப்படியென்றால் நாம் அதிகமாக அலசி காரணம் தேடுவதை விட்டுவிட வேண்டும்.

## (காரணங்கள் தேடுவது) உண்மைக்கு மாறாக

அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாத படிக்கு
திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல
அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.

யாக்கோபு 1:22

இயேசு எனக்கு காரணங்கள் தேடுவதை விட்டுவிடும்படி பணித்தார். ஆனால் எனக்குப் பழகிப்போனதால் விடுவது என்பது கடினமாயிற்று.

உதாரணமாக பல ஆண்டுக ளுக்கு முன்பு இயேசு ஊழியத்தில் செய்ய வேண்டிய பலவிஷயங்கள் பற்றி கூறியிருந் தார். ஆனால் எனக்கு அவற்றை எப்படி செய்வதென்பது பற்றி சிறிது யோசனையின்றி கழிந்தது. அதில் ஒரு காரியம் தினமும் டி.வி.யில் போதிப்பதாகும். அதைச் செய்வதென்றால் வேலை அதிகமாகும். அதிகப்படி ஆட்களும், பணமும் தேவையென்று நினைத்தேன். நிறைய ஆட்கள் என்றால் பெரிய இடமும் தேவைப்படும்.

ஆண்டவர் என்னை அவர் சொல்வதைச் செய்ய மட்டுமே பணித்தாரேயன்றி அதிலுள்ள பிரச்சனைகளையும், அதை எப்படியெப்படி செய்வது என்றும் என்னை அலசிப்பார்க்கச் சொல்லவில்லை. அவரைத்தேடவே சொன்னார். அவருக்குள் கீழ்படிந்து அந்த வேலையை மட்டுமே செய்யும்படி பணித்தார்.

அவைகளைச் செய்வதற்கு இடமோ, பணமோ, எங்கிருந்து கிடைக்குமென்பது எனக்குத் தெரியாது. ஆனால் இயேசுவின் திருவடி நிழலில் இருந்து அவரை போற்றி துதிப்பதினாலும், என் கவனத்தை அவர்மீது வைத்து விட்டாலும் எல்லாம் அவர் ஏற்பாட்டின்படி நடக்குமென்பது நிச்சயம் தெரியும்.

என்னுடைய வேலை இயேசுவை முற்றிலும் நம்பிக்கையுடன் விசுவாசித்து அவர் காட்டும் வழியில் சென்று அந்த பணிகளைத் துவங்குவதுதான். அதைவிட்டு அவற்றிற்கு காரணங்களும், விளக்கங்களும் தேடிப் போவது தேவையற்றது. அவர் என்னை அவற்றிலிருந்து விலகிப்போய் அவர் காண்பிக்கும் பாதையில் செல்லவே பணிக்கிறார்.

நாம் கவலைபடும்போது மன அமைதி இழக்கிறோம். காரணங்கள் தேடிப்போகும் போது குழப்பத்தில் வீழ்கிறோம். அமைதியுடனிருப்பது ஆண்டவரின் நிழலிலிருப்பதற்கீடாகும்.

நாம் ஏன் குழம்பி போகிறோமென்று ஒருமுறை நான் இயேசுவைக் கேட்டபோது நாம் காரணங்களை தேடுவதைத் தவிர்த்தால் குழம்ப மாட்டோம் என்று கூறினார்.

நாம் செல்லும் பாதை சரியானதல்ல என்பதையே நம்முடைய குழப்பம் காண்பிக்கிறது. நாம் குழம்ப ஆரம்பித்தவுடனேயே எங்கோ வழி தவறிவிட்டோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இயேசுவின் யோசனைகளும், ஏற்பாடுக ளும் நம்முடையதைவிட மிகவும் மேலான வைகள். ஆகையினால் நம்முடைய அலசல் களையும், விளக்கங்களையும் மட்டுமே கொண்டு செல்லாமல் அவரின் மீது பூரண விசுவாசமும், நம்பிக்கையும் வைத்துச் செல்வோமானால் குழப்பம் என்பது சிறிதும் உண்டாகாது. அது துவங்கு முன்பே அதைத் தவிர்த்தவர்களாவோம்.

## முடிவில்லாதா உரையாடல்

அன்றியும் ஜெப ஆலயத்தலைவர்க ளுக்கும், துரைத்தனைத்தார்களுக்கும், அதிகாரமுள்ள வர்களுக்கும் முன்பாக உங்களை கொண்டு போய் விடும் போது எப்படி என்னத்தை மாறுத்தரமாகச் சொல்லுவோம் என்றும், எதைப் பேசுவோம் என்றும் கவலைப் படாதிருங்கள்.

நீங்கள் பேச வேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பார் என்றார்.

லூக்கா 12:11,12

சில சமயங்களில் நாம் செய்ய வேண்டிய தைப் பற்றி மட்டுமல்லாமல் பேச வேண்டிய தைப் பற்றியும் கூட அதிகம் யோசித்து விளக்கம் தேடுகிறோம்.

வீட்டில் சிலசமயம் உங்கள் கணவரிடமோ மனைவியிடமோ எதிர்த்துப் பேசும்படி நேரலாம். அதேபோல் வேலைசெய்யும் இடத்திலுள்ள உங்கள் மேலதிகாரியிடம் சம்பள உயர்வு பற்றியோ அல்லது கீழே உள்ளவர் சரியானபடி நடந்து

கொள்ளாததுப் பற்றி அவரிடமோ பேசும்படி நேரிடலாம். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் நீங்கள் கவலையால் ஆட்கொள்ளப்படுகிறீர்கள்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நீங்கலாகவே மனத்திற்குள் பேசிப்பேசி குழம்பாமல், ஆண்டவரிடம் பூரண நம்பிக்கையும், விசுவாசமும் வைப்பதற்கு முடிவெடுங்கள். ஆண்டவர் நடத்தும் வழியில் சென்று அவரின் துணையில் அவ்வப்போது வரும் நிலைமைகளை எதிர்கொள்ளலாம்.

உங்களுக்கு அந்த சந்தர்ப்பங்களில் எப்படி பேசி நடந்துகொள்ள வேண்டுமென்பதில் பொதுவாக ஒரு கருத்து இருக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் அதில் ஒரு நடுநிலை தேவையானது. அந்த கருத்தே ஓர் வெறியாக இருந்ததென்றால் நீங்கள் ஆண்டவரின் அபிஷேகத்தைக் கோராமல் எப்போதும் அந்த பிரச்சனைப் பற்றியே யோசித்துக் கொண்டிருப்பீர்கள். முற்றிலும் உங்கள் திறமையையே நம்பிக்கொண்டு, ஆண்டவரின் அருளைக் கோறாமல் இருந்தால் நிச்சயம் உங்கள் காரியம் வெற்றி பெறாது.

ஆண்டவரின் அருளைக் கோரிப்பெறாமல் நாமாகவே பல பயனற்ற வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டிருப்போம். ஆனால் இயேசுவின் அருளை யாசித்துப் பெற்றால் சில வார்த்தைகளையே செலவழித்து அமைதியையும், ஒருமைப்பாட்டையும் பெறலாம். நாமாகவே பேசுவது குழப்பத் தையும் கெடுதலையுமே விளைவிக்கும்.

சில சமயங்களில் கஷ்டமான சந்தர்ப்பங் களைச் சந்திக்க நாம் கையாள வேண்டிய விதத்தைப்பற்றி பலமுறை யோசித்து ஓர் முடிவெடுப்போம். சற்று நேரத்திற்குள் மறுபடி அதன் விளைவு இப்படியாகுமோ அல்லது அப்படியாகுமோ

என்றெல்லாம் பலகேள்விகள் மனத்திற்குள் தோன்றி நாம் மிகவும் குழம்பிப்போய் விடுவோம்.

ஒருநாள் இரவு சமாளிக்க வேண்டிய ஒரு விஷயம் பற்றி யோசித்து, யோசித்து கடைசியில் என்ன செய்யலாமென்று முடிவு செய்தேன். இருப்பினும் என் மனதிற்குள் முடிவற்ற பேச்சு வார்த்தை நடந்துகொண்டே யிருந்தது. நான் பேசி முடிக்க வேண்டியது ஒரு கசப்பான விஷயம். அதைப்பற்றி நான் பேசும்போது எதிராளிகளுக்கு அது கோபத்தை ஏற்படுத்துமென்று நினைத்தேன். ஆனால் அதே சமயம் நான் அதுபற்றி பேசி தீர்வு காணாவிட்டாலும் நான் என் பொறுப்பிலிருந்து நழுவப் பார்ப்பதாகும். எனக்கு எல்லாவற்றிற்கும் ஒப்புதல் அளித்து எப்படியாவது மற்றவர்களை திருப்திசெய்ய வேண்டுமென்பதுமில்லை. (எபேசியர் 6:6, கொலோசெயர் 3:22) அந்த விஷயத்தில் எனக்கு அமைதியும், நம்பிக்கையும் மிகவும் தேவையாயிருந்தது.

ஆண்டவர் நமக்கு அமைதியைத்தர எப்போதும் தயாராக இருக்கிறார். அதை நாமே கேட்டு பெற வேண்டும். நாம் துன்பங்கள் என்ற வெய்யிலில் காய்ந்து, உலர்ந்து, வியர்த்து, சோர்ந்து போகலாம் அல்லது இறைவனின் குளுமை நிழலிலும், அமைதியிலும் மகிழ்ச்சியுடன் தங்கி இளைப்பாறலாம். அதைத் தேர்ந்தெடுப்பது நம் கையில்தான் இருக்கிறது.

## இயேசு நமக்குச் செய்யும் ஏற்பாடுகள் நல்லவையே!

நீங்கள் எதிர் பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு
கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில்
நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று

**கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேது வான நினைவுகளே.**

**எரேமியா 29:11**

**சிறு வயதில் நான் சரியான குடும்ப சூழல் இல்லாததால் மிகுந்த கஷ்டத்தில் வளர்ந்ததால், பெரியவளான பின்பும் நான் ஏதொன்றையும் பேசும் முன்பு யோசித்து சரியான படியே பேசுவேன். தவறான படி பேசினால் நான்தான் அதனால் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட வேண்டும் என்று பயப்படுவேன்.**

**என் வாழ்வில் பெரும்பாலான நேரங்களில் நான் மனதிற்குள் ஒவ்வொருவரிடமும் என்ன பேசுவது, அதற்கு என்ன பதில் கிடைக்கும், பிறகு நான் என்ன சொல்ல வேண்டும் என்றெல்லாம் கற்பனை சம்பாஷனை நடத்திக் கொண்டிருந்தேன். எந்தவிதமான தவறும் நேராமல் எல்லாம் எப்போதும் சரியாகவேயிருக்க வேண்டுமென்று நினைத்தேன். அதன் விளைவாக என் மனம் எதிர்மறை எண்ணங்களையும் தற்காப்பு எண்ணங்களையும் வளர்க்கலாயிற்று.**

**எனக்கு அறிமுகமில்லாத யாரோ ஒருவர் ஏதோ என்னைப்பற்றி சாதாரணமாக சொன்ன ஓர் அபிப்பிராயத்தைப் பற்றி ஓயாமல் சிந்தித்து அதிலுள்ள உள் அர்த்தம், வெளி அர்ததம் என்று பிரித்துப் பார்த்து நாட்கணக் கில் வீணடிப்பேன். அது என்னுடைய பயத்தாலும் பாதுகாப்பற்ற மனநிலையாலுமே உண்டானது.**

**இந்த மாதிரி பயனற்ற விஷயங்களில் நம் நேரத்தை வீணடிப்பதை இயேசு விரும்புவதில் லை. நம் வாழ்க்கைக்கு நம் பரம பிதா ஓர் பாதை ஏற்கனவே வகுத்திருக்கிறார். நம் எண்ணங் களை விடவும் அவருடைய எண்ணங்கள் மிக**

உயர்வானவை. (ஏசாயா 55:8,9) நீங்களோ அல்லது நானோ அவரை புரிந்து கொள்ள இயலாது.

பல வருடங்களின் போராட்டத்திற்குப் பின்பு நான் ஒருமுறை இயேசுவிடம் கேட்டேன். இயேசுவே என்னிடம் என்ன குறை? என்று. அப்போது தேவன் என்னிடம் கூறிய பதில் என் வாழ்க்கையையே மாற்றியது. நான் வளர்ந்த விதமும் சூழலும் என் மனதிலும் எண்ணங்களிலும் பயத்தை ஆழப்பதித்திருக் கிறது என்று பதிலளித்தார். எப்போது பரிசுத்த ஆவியின் துணையால் நான் என் பயத்தைக் களைய முற்பட்டேனோ அதுமுதல் ஆண்டவரும் என்னுடன் கூடவே இருந்து உதவிக்கொண்டிருக்கிறார். நான் அதிக அளவு மாறி இருந்தாலும் இன்னும் மாறவேண்டியது நிறையவே இருந்தது.

அப்படியிருந்தும் சீக்கிரத்தில் எல்லாம் சரியாகிவிடும் என்று அடிக்கடி அவர் எனக்கு நம்பிக்கையூட்டிக் கொண்டிருப்பார். என் குழந்தைகள் என்னிடம் அவர்களின் சிறு சண்டைகள் மூலம் அழுதுகொண்டு வரும் போது நான் அவர்களை நல்ல வார்த்தைகள் சொல்லி பாதுகாப்பு கொடுத்துத் தேற்றுவேனோ அதுபோலவே இயேசுவின் செய்கை எனக்கு இதமளிக்கும். இதைப் பலதடவை மனதிற்குள் நினைத்துப் பார்த்துக்கொள்வேன்.

ஒரு சமயம் ஒரு கருத்தரங்கை நாங்கள் நடந்த முன்னேற்பா டுகள் செய்திருந்தும் சில சமயங்களில் தேவையான பொருட்கள் வந்து சேராமல் கடைசி நேரத்தில் சோதனை ஏற்படும். எப்படி அந்தச சிக்கலை சமாளிக்கப்போகி றோம் என்று கவலைப்படுவேன். எல்லாம் முன்கூட்டியே ஒழுங்காக செய்திருந்தும் தவிர்க்க முடியாத இப்படியொரு நிலைமை எப்படியேற்பட்டது என்று மேலும், மேலும் யோசித்து கவலையில்

ஆழ்ந்து விடாமல் ஆண்டவர் இருக்கிறார், அவர் நம்மை காப்பாற்றுவார் எல்லாம் சரியாகிவிடும் என்று பலமுறை சொல்லிக் கொள்வேன். அதுபோலவே கடைசி நேரத்தில் தேவையான பொருட்கள் வந்து சேர்ந்துவிடும்.

## விசுவாசத்தை வளர்த்துக் கொள்ளுதல்

உபத்திரவம் பொறுமையையும், பொறுமை
பரீட்ச்சையையும், பரீட்சை நம்பிக்கையை யும்
உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து,
உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்.

ரோமர் 5:3,4

நான் மேற்கூறிய சம்பவம் போன்று உங்கள் வாழ்க்கையிலும் சில நேரங்களில் நடந்து நீங்கள் அமைதியை இழந்திருப்பீர்கள். அப்படியான நேரங்களில் வாயினால் நாம் தேவனை வேண்டிக்கொள்வதால் மட்டும் ஏதொரு பயனுமில்லை. மனதில் மேன்மையான ஈடுபாடு இல்லாமல் இயேசுவே நான் உங்களை பணிகிறேன், உங்களை விசுவாசிக்கிறேன் என்றெல்லாம் கூறுவதுடன் நில்லாமல் எதிர்மறை எண்ணங் களையும், அலசுதலையும் தொடர்ந்து கொண்டிருப்போம். நாம் உண்மையாகவே கர்த்தரை நம்பி விசுவாசித்தோமானால் உள்மனதில் அப்படி கவலைப்பட மாட்டோம். நாம் அவரை நம்பவும் விசுவாசிக்கவும் பழகிக்கொண்டு இருக்கிறமோயல்லாது முற்றிலும் அதில் வெற்றி காணவில்லை என்பதேயாகும்.

விசுவாசமும், நம்பிக்கையும் வளர்த்துக் கொள்ள வேண்டுமானால் வாயினால் நாம் எல்லாம் சரியாகிவிடும் என்று சொன்னால் மட்டும்போதாது. நிமிட நேரத்தில் நடக்கும்

வித்தையல்ல அது. நம் மனதில் பழகிப்போய் விட்ட பயம், கவலை, பீதி போன்றவற்றை நீக்க அதிக நேரமும், பயிற்சியும் தேவைப்படுகிறது.

அதனால்தான் தேவனுடன் மனதால் ஒன்றியிருந்தல் அவசியமாகிறது. பீதி, பயம், இவற்றால் ஆட்கொள்ளப்படாமல் ஒவ்வொரு முறை அதிலிருந்து வெளிவரும்போதும் ஒரு புதுத்தெம்பும், தெய்வீக அனுபவமும் பெற்று பலத்துடன் எழுகிறோம். அப்படியே அந்த தெய்வீக அனுபவத்தை அடிக்கடி அனுபவித்துத் தேறினால் எந்த சாத்தானும் நம்மை ஏதும் செய்ய முடியாது.

## உண்மையில் கடவுள் ஒருவரே உதவுவார்

நீரே என்னை கர்ப்பத்திலிருந்து எடுத்தவர். என் தாயின்
முலைப்பாலை நான் உண்கையில் என்னை
உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருக்கப்
பண்ணினீர்.

கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்ட போதோ உமது
சார்பில் விழுந்தேன். நான் என் தாயின் வயிற்றில்
இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்.

என்னை விட்டு தூரமாகாதேயும், ஆபத்து
கிட்டியிருக்கிறது, சகாயரும் இல்லை.

சங்கீதம் 22:9-11

இப்போது தேவன் என்னுடன் துணையிருந்து வழிநடத்திக் கொண்டிருந் தாலும் கூட, நானும் முன்பு பல கஷ்டங் களை அனுபவித் திருக்கிறேன். நான் சாத்தானால் ஆட்டி வைக்கப்பட்டு அனுபவித்த கஷ்டங்களை இன்னும் மறக்க

வில்லை. பல இரவுகளில் ஏதும் செய்ய முடியாமல் அழுது புலம்பியிருக்கிறேன்.

பல நண்பர்களிடம் உதவி கேட்டு ஓடியிருக்கி றேன். அவர்களால் எனக்கு உதவ முடியு மென்று நினைத்திருந்தேன். கடைசியில் அப்படியெல்லாம் செய்வதை நிறுத்திக் கொண்டேன். என்நண்பர்களை நம்பாமல் போனதால் அல்ல - ஆண்டவரைத் தவிர வேறு யாராலும் எனக்கு உதவ முடியாது என்று புரிந்துக் கொண்டதால் தான்.

மனிதர்களின் உதவியினால் தீர்க்க முடிந்த பிரச்சனையென்றால் அது உண்மையில் பிரச்சனையேயாகாது என்று யாரோ ஒருவர் கூறினார். அது எனக்கு நினைவிற்கு வருகிறது.

டேவ்விற்கு ஏதேனும் பிரச்சனை இருந்தால் அவர் அதுபற்றி என்னிடம் ஏதும் கூற மாட்டார். அதனால் எனக்கு அவருக்கு என்ன பிரச்சனையென்றும் தெரியாது. எப்போது இருந்தது? எப்படி தீர்ந்தது? என்ற விபரம் ஏதும் தெரியாது. இதுபற்றி பல சமயங்கள் எல்லாம் முடிந்த பிறகு தெரியவரும்போது நான் மிகவும் கோபமடைவேன். அவரிடன் ஏன் என்னிடம் தெரிவிக்கவில்லையென்று கேட்டால் அவர் என்னால் எந்தவித உதவியும் அவருக்கு செய்திருக்க முடியாது, அதனால் என்னிடம் கூறவில்லை என்பார்.

மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வது தவறல்ல. நம்மிடம் அன்பும், அக்கறையும் கொண்டவர்களிடம் பிரச்சனைகளை பகிர்ந்து கொள்வது தவறான விஷயமல்ல. ஆனால் டேவ் தெரிந்து கொண்டது, நாமும் வாழ்வில் கடைபிடிக்க வேண்டியது. சில நேரங்களில் இயேசு ஒருவரால் மட்டுமே உதவ முடியுமென்பதைத்தான்.

எனக்கு என் கணவருக்கு உதவும் எண்ணம் இருந்தும்கூட உண்மையில் என்னால் முடியவில்லை. இயேசு ஒருவரால் மட்டுமே முடிந்தது. அதனால் அவர் இயேசுவிடம் மட்டுமே உதவிநாடிச் சென்றார்.

நம் கஷ்டங்களை நாம் தனியாகத்தான் அனுபவிக்க வேண்டும், என்று தேவன் என்னிடம் கூறினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஓர் ஆடடுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்திரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். (ஏசாயா 53:7)

மேற்கூறிய வசனத்தை ஒருமுறை என்னிடம் ஆண்டவர் எடுத்துக் கூறினார். ஆண்டவரின் துணைகொண்டு நீங்கள் வாழ்க்கையின் ஒரு கட்டத்தை அடைந்து விட்டீர்களானால் இதுவே உங்களுக்கு மேலும் பலம் கொடுக்கும் ஒரு புனித கட்டளை யாகும்.

## உங்களின் எல்லா கவலையையும் ஆண்டவரிடம் அர்ப்பணித்தல்

அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்

1 பேதுரு 5:7

நிலையாகவும், கவலைகளில்லாமலும், அநாவசிய ஆராய்தலும் இல்லாமல் ஆண்டவர் மீது பரிபூரண கவனம் செலுத்த விரும்பினேன்.

இந்த விஷயத்தில் டேவ் ஒரு தனித்திறமையும், தேவனின் அருளும் பெற்றவர். அவர் ஆண்டவரிடம் செலுத்தும் கவனத்தினால் உண்மையான அமைதியை யும், பாதுகாப்பையும் அவரிடமிருந்து அடைந்திருக்கிறார். டேவ் அப்படியிருந்தால் எங்களுக்கு மொத்தத்தில் நன்மையாக இருந்தது. அவரும் என்னைப் போல அடிக்கடி கவலைப்படுவாராகில் வாழ்வில் அமைதியே அற்றுப் போயிருக்கும்.

வீட்டின் வரவு செலவு வேலைகளை கவனிப்பது என் வேலையாகும். ஒவ்வொரு மாதமும் கொடுக்க வேண்டிய வாடிக்கையாளர் களின் கணக்கையெல்லாம் பலமுறை நானாகவும், கால்குலேட்டர் கொண்டும் கூட்டிப்பார்த்து, அந்த தொகையை எப்படிக் கொடுக்கப் போகிறோம் என்று கவலையில் ஆழ்வேன். டேவ் பிள்ளைகளுடன் டி. வி. பாாத்துக் கொண்டும், விளையாடிக் கொண்டும் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பதைக் காணும்போது எனக்கு ஆத்திரம் வரும். நாம் கவலையால் தவித்துக் கொண்டிருக்கும் போது, மற்றவர் நம்மைப்போல் தவிக்காமல் மகிழ்ச்சியுடன் இருப்பதைப் பார்க்கும் போது எரிச்சலடைவது இயற்கையானது.

நான் இயேசுவே நான் உங்களை விசுவாசிக்கிறேன் நீங்கள் இந்த மாதமும் எங்களுக்கு நிச்சயம் உதவி புரிவீர்கள் என்று வாயளவில் கூறிக்கொண்டு மனதளவில் கவலைப்பட்டு தவித்துக்கொண்டிருந்தேன்.

மாதமும் முடியும். இயேசுவும் எங்களுக்கு பணம் கிடைக்கும்படி ஏதேனும் ஒரு அற்புதம் செய்வார். அத்துடன் அந்த மாதத்தின் பணப்பிரச்சனை தீரும். ஆயினும் அடுத்த மாதக்கவலை எனக்கு தயாராக இருக்கும். நிச்சயம் யேசு எங்களுக்கு உதவி செய்வார் என்று தெரிந்தும், என் கவலைப்படும் பழக்கம் தொடரும்.

இயேசுவிடம் நம்பிக்கையும், விசுவாசமும் வைப்பது நம்முடைய தனிப்பட்ட அனுபவம். அது ஜெபத்தினாலும், கைகூப்பித் தொழுவதாலும் மட்டும் வந்துவிடாது. வேறு ஒருவராலும் அது கொடுக்கப்படவும் மாட்டாது. நாமாகவே ஒரு கால வரம்பிற்குள் இயேசுவை விசுவாசிக்க பழகிக் கொள்ள வேண்டும்.

## இயேசுவை கூப்பிடு

**ஆண்டவரே எனக்கு இரங்கும், நாடோறும் உம்மை நோக்கி கூப்பிடுகிறேன்.**

**சங்கீதம் 86:3**

ஆண்டவரை விசுவாசிக்கவும், நம்பவும் என்னுடைய பணத்தட்டுப்பாடும், கஷ்டமும் மட்டுமே காரணமல்ல. சில நேரங்களில் வேறுவிதமான கஷ்டங்களும் என்னை ஆட்கொண்டதுண்டு. மிகவும் மோசமாக மனம் புண்பட்டு நொந்து போன சமயங்களில் ஆண்டவரிடம் கதறியழுது கெஞ்சியிருக் கிறேன். இனி என்னால் கொஞ்சமும் தாங்க முடியாது என்றும் அவரின் உதவி நிச்சயம் தேவை, அதை அவர் எனக்கு அளித்தே ஆக வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.

அந்த மாதிரி மிகவும் துன்பமான நேரங்களில் நாம் ஆண்டவரை நன்கு தெரிந்து கொள்ள முடிகிறது. உண்மையில் இயேசுவிடம் ஒரு குழந்தையை போல கதறியழுவது மிகவும் ஆரோக்கியமானது. நாம் அழும்போது நம் குரலைப் பற்றியோ, நம் அழகைப் பற்றியோ கவலைப்பட தேவையில்லை.

நான் இயேசுவிடம் கதறிய சமயங்களில் ஒரு முட்டாள் போலத் தோற்றமளித்திருக் கலாம். ஆனால் நான் அதைப்பற்றி ஒருபோதும் யோசிக்காமல் அழுதிருக்கிறேன்.

## நீ எந்த திசையை நோக்கிப் போகிறாய்?

என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை, ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மிய மாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.

பிலிப்பியர் 4:11

நீங்கள் நினைத்த நிலையை நீங்கள் எட்டியிராவிட்டால் அதற்காக மனம் தளராதீர்கள். நீங்கள் உங்கள் முழு கவனத்தையும் இயேசுவின் மீது செலுத்தி அவரின் பாதுகாப்பிலும், நிழலிலும் தங்குவதற்கு நிறைய நேரமும் அனுபவமும் தேவை. நீங்கள் எந்த நிலையை எட்டியிருக்கிறீர்கள் என்பது கேள்வியல்ல, எந்த திசையை நோக்கி சென்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதே கேள்வியாகும்.

நீங்கள் கற்றுக்கொண்டிருக்கிறீர்களா? உங்களை மாற்றிக் கொள்ள விருப்பமா? உங்கள் வளர்ச்சிக்குத் தயாரா? உண்மையில் இந்தப் புத்தகத்தை இப்போது நீங்கள் படித்துக் கொண்டிருப்பதே உறுதிப்படுத்துகிறது நீங்கள் பயம், பீதி, கவலை, பாதுகாப்பற்ற தன்மை இவைகளைக் களைய தயாராகி விட்டீர்களென்பதை. நீங்கள் இப்போது செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் அனாவசிய சிந்தனைகளைக் களைத்து ஆண்டவன்பால் அன்பும், கவனமும் செலுத்தி நல்ல அனுபவங்களைப் பெறுவதேயாகும்.

## உன் கடமையை செய்து முடி

உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி, அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப் படும்.

நீதிமொழிகள் 16:3

தோல்வியைக் கண்டால் ஏற்படும் பயம்தான் நான் எப்போதும் எதையும் அலசிப் பார்ப்பதன் காரணம் என்று நினைக்கிறேன். நான் எப்போதும் மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்வேன். எல்லாம் எப்போதும் சரியாகவே நடக்க வேண்டும் என்று நினைப்பேன். நான் பொறுப்பேற்றுக் கொள்வதோடல்லாமல் அதிக கவனமும் செலுத்துவேன்.

இயேசு நாம் பொறுப்புடன் கடமையைச் செய்து முடிப்பதை மட்டுமே விரும்புகிறார். அக்கரையுடன் கூடிய கவனத்தை களையச் செய்கிறார். ஏனென்றால் அவர் நம்மை கவனித்துக் கொள்கிறார்.

உங்களைப் பற்றி எனக்கு தெரியாது. ஆனால் என்னைப் பற்றி நன்றாகத் தெரியும். என் வாழ்க்கையில் பல வருடங்கள் நான் என்னுடையது அல்லாதவை என்னால் முடியாதவை போன்ற எல்லா வேலைகளையும் செய்ய விழைந்ததில் அதிக கவலை, பயம் இவற்றால் அலைக் கழிக்கப்பட்டேன். அந்த சில வருடங்கள் எனக்கு பயனற்றுப் போனது.

நம்மால் செய்ய முடியாத காரியங்களையே எப்போதும் செய்ய முயல்வது வெறுப்பையே உண்டு பண்ணும். சிலவற்றிற்கு தீர்வு காண முடியாது. அப்படியானவற்றை செய்ய முயல்வது கூட வெறுப்பை ஏற்படுத்தும்.

## "நன்றாக இருக்கிறது!"

கோபத்தை நெகிழ்ந்து உக்கிரத்தை விட்டுவிடு,
பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு
வேண்டாம்.

சங்கீதம் 37:8

ஏதும் செய்ய முடியாது போகும் சில நேரங்களில் நல்லது, நல்லது என்று சொல்லி விட்டு இயேசுவின் மீது கவனம் செலுத்துவது நன்மையளித்துள்ளது.

நானும், டேவ்வும் ஒரு சமயம் காலை நேரத்தில் வேலைக்காக வெளியில் புறப்பட்ட போது ஒரு சிறு தவறு நடந்தது. டேவ் ஏதோ கூறியபோது கூட நான் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் நல்லது, நல்லது என்று கூறியதில் அந்த விஷயம் அத்துடன் முடிந்துபோனது. நாங்களும் தொடர்ந்து அன்றைய வேலைகளில் ஈடுபட்டோம்.

சில விஷயங்களைப்பற்றி கவலையும், வருத்தமும் அடைவதில் பயனில்லை. இருப்பினும் பலர் அப்படிச் செய்கிறார்கள். துரதிஷ்டவசமாக பல கிறிஸ்தவர்கள் பல நேரங்களில் கோபமும், ஆத்திரமும் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் கோபமடைவது பெரிய விஷயங்களுக்காக அல்லாமல், சிறு சிறு விஷயங்களுக்காகவும், அவர்கள் நினைத்த மாதிரி இல்லாதவை களுக்குமேயாகும். அப்படிப்பட்ட சிறு விஷயங்களை மனதிலிருந்து அகற்றி விட்டு நல்லது நல்லது என்று கூறி இயேசுவிடம் அக்கரை செலுத்துவது நன்மையளிக்கும். அப்படி செய்யாமல் நம்மால் ஏதும் செய்ய முடியாதவற்றிற்காக முயற்சி செய்து கொண்டாயிருக்கிறார்கள்.

ஒருமுறை மட்டுமல்ல, பலமுறை நல்லது நல்லது என்று கூறும் அந்த சிறிய செயல் உண்மையில் உதவியாயிருக்கிறது.

என் மகன் டேனி எழுதும்போது தவறு செய்து விட்டால் ஆத்திரமடைந்து எழுதிக் கொண்டிருக்கும் காகிதத்தை கசக்கி எறிந்து விடுவான். மறுபடியும் முதலிலிருந்து எழுத தொடங்குவான். பிறகு மறுபடி தவறு செய்து ஆத்திரமடைந்து

எழுதவே மறுத்து விடுவான். அதனால் நானும், டேவ்வும் சேர்ந்து அவனுக்கு நல்லது நல்லது என்று சொல்வதற்கு பழக்கி அதன்மூலம் அமைதி பெற வழி செய்தோம்.

## நடுநிலை தவறாதிரு

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் எதிராளியான பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைத்தேடிச் சுற்றித்திரிகிறான்.

1 பேதுரு 5:8

சில நேரங்களில் நம்முடைய பதட்டம், பயம், கவலை யாவும் சேர்ந்து நம் பணியை சரிவர செய்ய முடியாமல் செய்கின்றன. நாம் நம்மால் முடிந்த அளவு திறமையுடன் செய்து முடித்து விட்டு மற்றவர்களை ஆண்டவரின் பொறுப்பில் விட்டுவிட வேண்டும். நாம் அவர் மீது வைக்கும் விசுவாசத்தினால் அந்த பணியை அவர் நன்றாகவே முடித்து தருவார்.

நாம் பயம், கவலை இவைகளால் அலைக் கழிக்கப்படாமல் அமைதியாகவும், நடுநிலை தவறாமலிருக்கும் போதும் நம் பணிகளைச் சரியாக செய்ய முடியும். நாம் நடுநிலையில் இருக்கும்போது நம்மால் நிலமையைச் சரியாக சீர்தூக்கிப் பார்க்க முடிவதால் எதைச் செய்யலாம், எதைச் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்ய முடிகிறது.

பெரும்பாலான நேரங்களில் நம்மால் நடுநிலை வகிக்க முடியவில்லை. எல்லாமே ஆண்டவர் செய்து விடுவார் என்று நாம் ஏதும் செய்யாமலிருந்து விடுவோம். இல்லையேல் எல்லாவற்றையும் நம்தலைமேல் போட்டுக் கொண்டு

ஆண்டவரின் நினைவு கூட இல்லாமல் உடலளவில் உழைத்துக் கொண்டிருப்போம். இந்த இரண்டு நிலையுமே சரியானதன்று. நம்மால் முடிந்த அளவு இயேசுவிடம் நம்பிக்கை வைத்து செய்து விட்டு, இனி இதற்குமேல் முடியாது ஆண்டவரே என்று கூறி விட்டுவிட வேண்டும்.

நாம் செய்ய முற்பட்டு, முழுவதும் செய்து முடிக்காமல் கஷ்டத்தில் அகப்படும் சமயம் இயேசுவை கூவியழைக்க வேண்டும். இயேசுவே உம்மையே நான் முழுமையாக விசுவாசிக் கிறேன், நீங்கள்தான் எனக்கு வழி காண்பித்து உதவ வேண்டும் என்று பிரார்த்திப்பீர்க ளானால் நிச்சயம் அவர் உதவி உங்களுக்குக் கிடைத்து உங்கள் எண்ணம் ஈடேறும்.

நமக்கு தெரியாததையும், செய்ய முடியாதவற்றையும் செய்து முடிக்க எல்லையில்லாத கஷ்டங்களை அனுபவிக்க வேண்டுமென்பது சரியானதல்ல. நாம் கண்மூடித்தனமாக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தால் அது நம் தவறுதான். நம்மால் முடியாததை செய்து முடிக்க வேண்டும் என்று இயேசு எதிர்பார்ப்பதில்லை யென்று நாம் நம்ப வேண்டும். அவரிடம் பூரண நம்பிக்கையும் விசுவாசமும் வைத்து நமக்குத் தெரிந்ததையும், முடிந்ததையும் செய்து முடிப்பதே நடுநிலையென்பதாகும்.

## நம்பிக்கையும் நடுநிலையும் உள்ள ஓர் மனிதன்

விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப்
பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி,
அழைக்கப்பட்ட போது, கீழ்படிந்து, தான் போகும்

இடம் இன்ன தென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்.
எபிரெயர் 11:8

ஆபிரகாம் நம்பிக்கையுள்ள ஓர் நடுநிலை மனிதன். ஒரு நிமிடம் அவனுடைய நிலமையை சிந்தித்துப் பாருங்கள்.

தேவனுக்கு கீழ்படிந்து தன் நண்பர்க ளையும், குடும்பத்தார்களையும் விட்டு ஒரு தெரியாத புதிய இடத்திற்குப் பயணமானான்.

அவனின் ஒவ்வொரு அடிக்கும் அவனு டைய காதில் சாத்தான் பலவிதமாக கூறிக் கொண்டேயிருந்திருக்கும். ஏ முட்டாளே! நீ எங்கு சென்று கொண்டிருக்கிறாய்? இரவில் என்ன செய்யப்போகிறாய்? நீ எங்கு படுத்துறங்குவாய்? நீ என்ன சாப்பிடுவாய்? ஏ ஆபிரகாமே, நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்? இது தேவனின் யோசனையென்று நீ எப்படி ஏற்றுக் கொள்கிறாய்? இம்மாதிரி செய்யும்படி கடவுள் வேறு யாரையாவது பணித்திருக்கிறாரா?

## உன் எண்ணங்களைச் சிதற விடாதே

அவர் அவர்களை நோக்கி, நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்? உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன?
லூக்கா 24:38

சாத்தான் என்ன சொல்லிய போதும் அதைப் பற்றி கவலைப்படாமல் ஆபிரகாம் சென்று கொண்டேயிருந்தான். தான் எங்கு போய்க் கொண்டு இருக்கிறோம் என்று தெரியாத

போதிலும் கூட, அதைப்பற்றி கெடுதலான எண்ணங்கள் ஏதும் ஆபிரகா முக்கு ஏற்படவில்லையென்று வேதத்தில் கூறப் பட்டுள்ளது. (எபிரெயர் 11:8)

சில நேரங்களில் நாமே தேவையில்லாத கவலைகளை வரவழைத்துக் கொள்கிறோம். கவலைப்படுவதில் நம்மில் ருசி காண்கிறார்கள். உண்மையில் கவலை ஏதும் இல்லாவிடினும், சாத்தானைத் தேடிப்போய் கேட்டு வாங்கி வருவோம்.

நம் மனம் எதனால் நிரம்பியிருக்க வேண்டுமென்று ஒருதரம் நினைத்துப் பார்ப்போம். இயேசுவின் துதிகளும், தோத்திரங்களும், முழுமையான நம்பிக்கை யும், விசுவாசமுமே நிறைந்திருக்க வேண்டும்.

நாம் ஒருநாளில் என்னவெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறோமென்று ஒரு கணக் கெடுப்பு செய்தோமானால், பல விஷயங்கள் புரியும். கவலைகள், பயங்கள், சந்தேகங்கள், தீய நினைவுகள், வெறுப்பு, தவிப்பு போன்ற அநேக விதமான எதிர்மறை எண்ணங்களே பெரும்பாலான நேரங்களில் ஆக்ரமித்துக் கொண்டிருப்பதை உணர்வோம்.

அதன் பலனாக மனம் இறுகிப்போய், ஒட்டடை படிந்த மாதிரியாகி விடுகிறது. நாம் பரிசுத்த ஆவியின் தூய எண்ணை பூசி எல்லாவற்றையும் துடைத்து, சுத்தப்படுத்தி, பழுது பார்த்து வைப்போம்.

ஆபிரகாம் போல இயேசுவின் மீது முழுமையான நம்பிக்கையும், விசுவாசமும் வைத்து, நம்மால் முடிந்ததை உண்மையான மனம் கொண்டு செய்து முடித்து மற்றதை அவரிடம் ஒப்படைத்து அமைதி காப்போம்.

உங்கள் வாழ்நாளை வீணாக்காதீர்கள். உங்களின் பொறுப்புகள் எவையென்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். கடவுளின் பொறுப்புகளை நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறாரோ அதை மட்டும் செய்யுங்கள். மற்றவைகளை அவரிடம் விட்டுவிடுங்கள். உங்கள் பொறுப்புகளைற மட்டும் நன்றாக செய்து முடியுங்கள். உங்கள் கவலைகளை வைத்துவிடுங்கள்.

# முடிவுரை

முன்பு நாம் ஆராய்ந்தது போல் சங்கீதம் 91ல் 2ம் வசனமும், 1-ம் வசனமும் ஒரே கருத்தை கூறுகிறது.

> உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்
>
> நான் கர்த்தரை நோக்கி, நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.
>
> சங்கீதம் 91:1,2

## நம் அடைக்கல அரண்

மேற்கூறிய இரண்டு வசனங்களும் நமக்கு கூறுவதானது - நாம் கவலையோ, பீதியோ, வெறுப்போ அடைய தேவையில்லை. நம்முடைய நம்பிக்கையையும், விசுவாசத் தையும் இயேசுவிடம் வைப்போம் என்பதா கும். வசனம் இரண்டில் இயேசு நமக்கு

அடைக்கலமளிப்பவர் மட்டுமல்ல, அரணா கவும் இருக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது.

அடைக்கலமென்பது இயேசுவின் பாதுகாப்பு நிழலாகும். நாம் அதில் அடைக்கலமாகும் போது எதிரியால் நம்மை பார்க்க முடியாது. நாம் அவரின் பாதுகாப்பு சிறகுகளின் அணைப்பில் இருப்பது சாத்தானால் கூட அறிய முடியாது. நாம் அங்கிருந்து சாத்தானை பார்க்க முடியுமே தவிர அவனால் நம்மை கண்டறிய முடியாது. ஏனெனில் நாம் தேவனின் பாதுகாப்பு நிழலில் மறைந்திருப்போம்.

அரண் என்பதைக் கண்ணால் பார்க்க முடியும். அது எதிரிகள் தாக்கும்போது ஒளிந்து கொள்ளும் இடமாகும். நாம் தேவனின் அரணுக்குள் இருக்கும் போது நம் எதிரியால் நம்மைப் பார்க்க முடிந்தால் கூட அருகில் நெருங்க முடியாது.

நாம் தேவனின் பாதுகாப்பு நிழலுக்குள் அடங்கியிருந்தாலும், அல்லது அரணுக்குள் அடங்கியிருந்தாலும் நம்முடைய எதிரியால் ஏதும் செய்ய முடியாது. ஏனெனில் கடவுளின் பாதுகாப்பில் நாம் இருப்பதால் அவர்களால் நம்மைப் பார்க்க முடிந்தால் கூட நெருங்க முடியாது. இயேசு அந்த அளவிற்கு நம்மை பாதுகாக்கிறார்.

வசனம் 2ம், வசனம் - 1க்கு ஈடான முக்கியத்துவம் உடையது. இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள எல்லாவித வாக்குறுதிகளும் இந்த வசனங்களில் கூறப்பட்டுள்ளவைகளை நிறைவேற்று வதைப் பொறுத்தே உள்ளது. உன் வழிகளிளெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார் (வசனம் 11). நாம் முதலாம், இரண்டாம் வசனங்களில் கூறப்பட்டிருப்பதற்கு கீழ்ப்படியும்போது இவையெல்லாம் நிறைவேறுகிறது.

# இயேசுவைச் சார்ந்திருத்தல்

கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார் மேலுள்ள உங்கள் அன்பையும் குறித்து நாங்கள் கேள்விப்பட்டு, பரலோகத்தில் உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கை யினிமித்தம்...

கொலொசெயர் 1:3,4

சங்கீதம் 91ல் இரண்டாவது வசனத்தில் அவர் நான் கர்த்தரைப் பற்றி கூறுகிறேன் எனும்போது உதட்டளவில் மட்டும் கூறவில்லை. அது வேத வசனங்களை மனப்பாடம் செய்து சத்தமாக ஒப்புவித்தல் அல்ல. கர்த்தரிடம் உண்மையான நம்பிக்கையும், பரிபூரண விசுவாசமும் வைப்பதுதான். உண்மையில் அவரைச் சார்ந்திருப்பதாகும். கொலொசெயர் 1:4ன் படி அதுவே முழுமையான அவரை சார்ந்துக்கொண்டிருத்தலும் நம்பிக்கையாகும். மனித ஆளியலால் அவரின் அறிவு, ஞானம், நல்ல குணம் எல்லாவற்றிலும் முழுமையான விசுவாசமும் வைப்பதேயாகும்.

நம்முடைய பயத்தினால் நாம் அடிக்கடி அவர்மீது சார்ந்திருக்கிறோம். ஆனால் முழுமையாக சாராமல் நம் பாரத்தின் ஒரு பகுதியை நாமே தாங்கிக்கொள்கிறோம். ஏனெனில் இயேசு சற்று நகர்ந்தாலும் நாம் நம் கால்களில் நின்று கொண்டே இருப்போம். நாம் முழுமையாக சாராமல் நம்முடைய பாதி கனத்தை நாமே சுமப்பது அவர்மீது முழுமையான நம்பிக்கை வைக்காததால் தான். அப்படி ஓரளவு மட்டுமே அவர்மீது சார்ந்திருக்கும் போது இயேசுவே உங்களை நான் நம்புகிறேன், இருப்பினும் ஒருவேளை நீங்கள் முழுமையாக என்னைத் தாங்கி

கொள்ளாவிடில், நான் விழுந்து விடாமலிருக் கவே சற்று ஊன்றிக் கொள்கிறேன் என்ற எண்ணங்களே மனதில் ஓடிக்கொண்டி ருக்கும்.

இது முழுமையான, உண்மையான விசுவாசமல்ல, நாம் தோல்வியுருவோம் என்ற சந்தேகமும், அவநம்பிக்கையுடனும் கூடிய செயலாகும்.

தேவன் உங்களுக்கு உண்மையான அரணும், அடைக்கலமுமாய் இருக்கிறாரா? நீங்கள் அவரிடம் உங்களை பூரணமாக ஒப்படைக் கிறீர்களா? அல்லது வெறும் வாயளவில் பேசுகிறீர்களா?

நீங்கள் சங்கீதம் 91ல் வசனங்கள் 1,2 இவற்றிலுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றி யிருப்பீர்களானால், மிகுதியுள்ள பகுதிகளில் உங்களுக்கு மிகச் சிறப்பான விஷயங்கள் காத்திருக்கின்றன.

## அவர் உங்களை விடுவித்து மறைத்துக்கொள்வார்

அவர் உன்னை வேடனுடைய கண்ணிக் கும்,
பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார்.

அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார். அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய், அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.

சங்கீதம் 91:3,4

முதன்மையானதும், அற்புதமானதுமான உறுதி மொழியினை பற்றிய கடவுளின் பாதுகாப்பை சங்கீதம் 91:3,4ல் காண்கிறோம்.

சண்டை போடும் போது தற்காப்பிற்காக கைக் கவசமும், கேடகமும் உபயோகப் படுத்தப்படுகிறது. கேடகம் எப்போதும் ஒரு நபருடைய முழு உடலையும் எதிராளியின் அம்பிலிருந்து காப்பாற்றித் தர கூடியதாயிருக்கும். சில கேடகங்கள் இரு பக்கங்களிலுமிருந்து வரும் அம்பு களிடமிருந்து காப்பாற்றுவதற்காக தட்டை யாக இல்லாமல் சிறிது வளைந்து காணப் படும். கைக்கவசம் கேடகம் போலில்லாமல் கைகளில் அணியப்படும் ஒன்றாகும். இந்த கவசம் வீரர்கள் ஒருவருக்கொருவர் எதிராக சண்டை போடும்போது அணியப்படும். எல்லாப்பக்கத்திலும் பாது காப்பைக் கொடுக்கக்கூடியது.

இந்த கருத்தை நாம் சங்கீதம் 125:2ல் காண்கிறோம். பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல் கர்த்தர் இதுமுதல் என்றைன்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார். (சங்கீதம் 125:2)

நாம் எந்தவித சூழ்நிலைகளிலிருந்தாலும் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பதை ரோமர் 8:31ல் காணலாம்.

இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமா யிருப்பவன் யார்? தேவன் நம்முடனிருக்கிறார் ஏனென்றால் அவ்வாறு அவர் வாக்களித்திருக்கிறார். "...நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை." (எபிரேயர் 18:5)

தேவன் நம்முடன் இருக்கிறார் என்பதை எபிரெயர் 13:5ல் நாம் காணலாம். மேலும் அவர் நம்மை கீழிருந்து பாதுகாக்கிறார் என்பதை சங்கீதம் 119:116லும் காணலாம். நான்

பிழைத்திருப்பதற்கு உமது வார்த்தையின் படி என்னை ஆதரித்தருளும். என் நம்பிக்கை விருதாவாய்ப்போக என்னை வெட்கத்திற்கு உட்படுத்தாதேயும். (சங்கீதம் 119:116) அவர் நம்மை மேலிருந்து பாதுகாப்பார் என்பதை சங்கீதம் 91:4 கூறுகிறது. அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார், அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய், அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும், கேடகமுமாகும். (சங்கீதம் 91:4)

ஆகையால் நாம் தேவன் எப்போதும் நமக்காகவும், நம்முடனும், நமக்கு கீழேயும், நமக்கு மேலேயும் இருக்கிறார். நம்மை சுற்றிலும் இருக்கிறா ரென்பதை மனதில் உறுதியாக ஏற்றுக் கொள்வோமாக. சாத்தான் மட்டும் நம்முடைய எதிரியாக இருப்பான். நாம் கடவுளோடு நம்பிக்கையான, உறுதியான நிழலில் இருக்கும்போது நம்முடைய பகைவர்கள் எவரும் நம்மை காணவோ, அணுகவோ முடியாது. இவையெல்லாம் உண்மையாக இருக்கும்போது நாம் ஏன் பயப்பட வேண்டும்.?

## நீங்கள் பயப்படாதிருப்பீர்கள்

இரவில் உண்டாகும் பயங்கரத்திற்கும், பகலில் பறக்கும் அம்புக்கும்,

இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும்
பயப்படாதிருப்பாய்.

உன் பக்கத்தில் ஆயிரம் பேரும் உன் வலது
புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது
உன்னை அணுகாது.

உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து
துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்.

எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்கு தாபரமாக் கொண்டாய்.

சங்கீதம் 91:5-9

இயேசுவின் பாதுகாப்பில் நாம் மறைந்துக் கொள்வது எவ்வாறு என்பதை நாம் கற்றறிய வேண்டும். நாம் அம்மறைவிடத்தில் எப்படித் தங்குவது என்பதை நன்கு தெரிந்துக் கொண்டால் அதுவே சாத்தானுக்கு ஒரு தொல்லையாகிவிடும். அதுவே அவனுக்கு பெரிய பிரச்சனையாக்கி அவனை பெலவீனனாக்கும். நாம் அமைதியாக சத்தமின்றி இருந்து சாத்தான் நம்மைத்தேடி அலைவதை காணமுடியும். ஆனால் அவனால் நம்மை நெருங்க முடியாது.

சில வருடங்களுக்கு முன்பு தேவன் என் வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தினார். அது சமயம் நான் ஏற்கெனவே இரட்சிக்கபட்டு பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் செய்விக்கப் பட்டிருந்தேன். இருப்பினும், பலவித பிரச்சனைகளைத் தாங்கிக் கொண்டிருந் தேன்.

அப்போதுதான் ஆண்டவர் அவரின் பிரசன்னத்தில் அவரின் பாதுகாப்பில் நாம் அமைதியும், மகிழ்ச்சியும் பெற்றிருக்கும் போது நாம் நிலைத்து நிற்கவும் தொடங்கு கிறோம் என்பதை எனக்கு உபதேசித்தார். அதுவே நமக்கு நிலையான வாழ்வு என்பதனை உணர்த்தினார்.

என் வாழ்வின் அந்த கட்டத்தில் நான் பலவித மேடு பள்ளங்களை கடந்து வந்து ஓய்ந்து போய் ஒரு நிலையான வாழ்க்கைக் காக ஏங்கிக்கொண்டிருந்தேன். என்னுடைய சமய சந்தர்ப்பங்களால் அழுத்தி அலைக் கழிக்கப்பட்ட ஓர்

உணர்ச்சிக்குவியலாக இருக்க எனக்கு விருப்பமில்லை. இயேசுவின் குழந்தையாகிய எனக்கு அவருடைய ஆசிகள் பெற்ற மகிழ்வுர வழியுண்டு என்று பைபிளில் கூறப்பட்டுள்ள வசனங்களை சாத்தானிடம் கூறிவிட்டு என் வாழ்வின் மிகுதி நாட்களை கழிக்க விரும்பினேன்.

அந்த கட்டத்தை நான் அடைந்தபோது, இயேசு எனக்கு அவரின் பிரசன்னத்திலே வசிப்பதன் பயனைப் பற்றி விளக்கம் கொடுத்தார். பல வருடங்கள் அவற்றைப் பற்றி சிந்தித்து அதை வாழ்க்கையில் அதிகம் கடைப்பிடிக்கவும் துவங்கினேன்.

பல வருடங்களுக்குப் பிறகு அது எவ்விதமான மாற்றமென்பதையும், என் வாழ்க்கை எப்படி நிலையானதாகவும், மகிழ்ச்சியுற்றதாகவும் மாறிவிட்டதென்பதை உங்களுக்கு கூறுகிறேன். அப்படிக் கூறுவதால் என் வாழ்வில் பிரச்சனைகளே கிடையாதென்று நான் சொல்லவில்லை. நான் போராடுவதில்லையென்றும் அர்த்தமில்லை. இவையெல்லாவற்றின் இடையிலும் நான் நிலைகுலையாமல் ஆண்டவரின் சந்நிதியில், பிரசன்னத்தில் இருந்து வருகிறேன்.

சங்கீதம் 91ல் உள்ள வார்த்தைகள் ஏதோ ஓர் அழகிய கவிதை மட்டுமல்ல. முழுமையான ஓர் உண்மையும் கூட, என் வாழ்க்கையே அதற்கு ஓர் நிருபணமாகும்.

நீங்கள் அந்த ரகசிய பாதுகாப்பில் தங்கியிருக்க பயிற்சி பெறுவீர்களாயின், உங்களுக்கும் மேலானவனாக இருந்து உங்களை அடக்கி அசைக்க சாத்தானால் இயலாது.

நீங்கள் மிக உயர்ந்தவரான இயேசுவின் பாதுகாப்பில் அடைக்கலம் பெறுவீர்களானால் அங்கு பொருந்தியிருந்து, சாத்தானின் நாசவேலைகள் என்னவெல்லாம் செய்கிற

தென்பதைக் காண முடியும். ஆயினும் எந்தத் தீங்கும் உங்களை நெருங்காது.

## உங்களுக்கு எந்த தீங்கும் வராது

ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை
உன் கூடாரத்தை அணுகாது.

உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி,
உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக்
கட்டளையிடுவார்.

உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள்
உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு
போவார்கள்.

சங்கீதம் 91:10-12

நாம் ஒழுங்காக ஆண்டவரின் செயல்களில் கீழ்ப்படிந்து நடப்போமானால், தேவனின் பாதுகாப்பு எப்போதும் இருந்துகொண்டே யிருக்குமென்று விரிவாக மொழிபெயர்க்கப் பட்டுள்ள பைபிளில் கூறப்பட்டுள்ளது.

எனக்கு உதவி புரியும் ஒரு பெண்மணி ஒரு சமயம் படகில் சென்று கொண்டிருந்தாள். அப்போது இயேசுவின் பாதுகாப்பினால் எந்தவிதமான கெடுதலும் நமக்கு நேராது என்று கூறும் 10வது வசனத்தைப் படித்து ஜெபம் செய்து கொண்டிருந்தாள். அப்போது திடீரென்று ஓர் அலையெழும்பி படகையடித்ததால் அப்பெண்மணி விழுந்து தலையை படகில் இடித்துக் கொண்டாள். அவளுக்கு ஏதும் புரியாமல் ஆச்சரிய மடைந்தாள். தான், கடவுளிடம் ஜெபம் செய்து அவருடைய பாதுகாப்பை வேண்டும் நேரத்தில் இப்படி நேர்வது எப்படி

சாத்தியமென்று நினைத்து ஆண்டவரிடம் கேட்டாள். அப்போது அவர் கூறினார் - தேவதூதன் உன்னைக் காக்கவே செய்தார், அதனால்தான் நீ மரித்துப் போகாமல், சிறிய காயத்துடன் பிழைத்திருக்கிறாய் என்று.

இதுபோல நாம் எவ்வளவு முறை தேவதூதனால் சாவிலிருந்து காப்பாற்றப் பட்டிருப்போமென்று எண்ணிப் பார்க்கிறோமா? அநேகமாய் எண்ணவே முடியாத சமயங்களிருக்கலாம்.

நமக்கு புரியாததையும், கண்களுக்குத் தெரியாததையும் கொண்டு எப்போதும் குறைகள் கூறாமல் ஆண்டவர் நமக்குச் செய்யும் நன்மைகளையெண்ணி அவருக்கு நன்றி கூறுவோம்.

## எதிரியை அழித்தல்

சிங்கத்தின் மேலும், விரியன் பாம்பின் மேலும் நீ நடந்து
பால சிங்கத்தையும், வலுசர்ப்பத்தையும்
மிதித்துப்போடுவாய்.

சங்கீதம் 91:13

மேலும் சிங்கம், தேள், பாம்பு இவையெல்லாம் எதைக்குறிக்கிறது என்பதை லூக்கா 10:19 நமக்கு விளக்குகிறது.

இதோ, சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும் சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன், ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது. லூக்கா 10:19

சிங்கம், சிறிய விஷப்பாம்பு, பெரிய பாம்பு, மற்றும் தேள் இவையாவும் எதிரியைக் குறிக்கின்றன. இயேசு அவைகள் மீது

மிதித்து நடக்கவும், நசுக்கவும் நமக்கு அதிகாரம் கொடுத்துள்ளார். அவர் அப்படிச் செய்ய ஓர் தனிப்பட்ட விசேஷமான அதிகாரத்தை நமக்களித்திருக்கிறார். நாம் அதைப் பயன்படுத்திக் கொள்ள தீர்மானித்தால் நம் எதிரியின் மீது ஏறி நடக்கலாம். அவர் நமக்களித்துள்ளவற்றை சரிவர பயன்படுத்துதலே நாம் அவரை சரிவர புரிந்து கொள்ளுதலாகும்.

## நாம் அவரை நேசிப்பதால்

அவன் என்னிடத்தில் வாஞ்சையாக இருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன், என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.

அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச் செய்வேன், ஆபத்தில் நானே அவனோடி ருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.

சங்கீதம் 91:14,15

நாம் இயேசுவின் ஆசிகளையும், பாதுகாப்பை யும் பெற வேண்டுமென்றால் அவரைப் பற்றியும், அவரின் நாமத்தையும் முழுமையாகத் தெரிந்துக் கொள்ளுதல் அவசியம். நாம் அவரிடம் நேரடியாகவே தொடர்பு கொள்ள வேண்டும். எப்போதும், நம் தாய், தந்தை, நண்பர்கள் மூலமே தொடர்பு கொள்ள முடியாது. நாமே ஒரு நேரடியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் அவரின் ரகசிய பாதுகாப்பில் வசித்து, அவருடன் நம் நேரத்தை செலவழித்தல் அவசியமாகும்.

பல சமயங்களில் நாம் ஆண்டவரே எம்மை மீட்டருளும் என்ற வார்த்தைகளையே திரும்ப திரும்ப கூறுகிறோம். உதட்டளவில் அதைக் கூறிக் கொண்டிருப்பது பயனளிக்காது. மீட்டருளுதல் என்பது ஓர் தொடரும் செயற்பாடு. நாம் கஷ்டங்களில் இருக்கும் போது முதலாவதாக தேவன் நம்முடனேயே இருக்கிறார். நமக்குத் தேவையான பலமும், தெம்பும் அளித்து அதில் வெற்றிப் பெறச் செய்கிறார். பிறகு அதிலிருந்து நம்மை மீட்டு, கௌரவிக்கிறார்.

பல வருடங்கள் என் கஷ்டங்களிலெல்லாம் தேவன் என் கூடவேயிருந்து அதிலிருந்து நான் வெளியேறும்படி செய்திருக்கிறார். ஆனால் அதிலிருந்து என்னை மீட்கத் துவங்கியதும், கூடவே கௌரவிக்கவும் துவங்கினார்.

நமக்குத் துன்பங்கள் வரும்போது நாம் எதைத் தேடி ஓடுகிறோம்? தொலைபேசியையா? அல்லது சிங்காசனத்தையா? தொடக்கத்திலே அது கடினமாக இருந்தாலும் நாம் இயேசுவிடம் உதவி நாடி ஓடுவது தான் பயனளிக்கு மேயல்லாது மக்களிடம் ஓடுவது எந்த பயனையு மளிக்காது. இதை நாம் நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும். கூட்டம் கூட்ட மாக மனிதர்களைக் கூட்டி நம் பிரச்சனை களைக் கூறினாலும் எந்த பயனுமிருக்காது. நம்மில் பலருக்கும் தங்களுடைய பிரச்சனைகளைச் சமாளிக்கவே யோசனையும், நேரமும் இல்லாதபோது மற்றவர் பிரச்சனை களுக்கு அறிவுரை கூறும் திறமை எங்கிருக்கிறது.

இதையெல்லாம் தவிர்த்து, இயேசுவின் ரகசிய பாதுகாப்பு இடம் தேடிப்போய் ஆண்டவரே எனக்கு யாராலும் உதவிச் செய்ய முடியாது. நான் உம்மையே முழுவதும் நம்பியிருக் கின்றேன். நீங்களே என்னைக் காத்து உதவி புரிய வேண்டும் என்று சொல்ல கற்றுக் கொள்ள வேண்டும்.

பல சமயங்களில் இயேசு நமக்கு வேறு ஒருவர் மூலம் உதவியனுப்புவார். ஆனால் நாம் பிறரிடம் உதவி தேட்டோமென்றால் அவர் வருத்தப்படுவார். ஆனால் நாம் அதைத்தவிர்த்து ஆண்டவரிடமே முதன்முதலில் சென்று அவரிடம் "ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும்படி எவரையாவது நீர் தெரிந்துக் கொள்வீரென்றால் அந்த நபரை நீர் அபிஷேகியும். ஏனெனில் யாரோ ஒருவர் எனக்கு உதவ நான் விரும்பவில்லை. எனக்கு உம்மிடமிருந்து ஒரு வார்த்தைக் கிடைக்க வேண்டும். இல்லையெனில் எனக்கு எதுவும் வேண்டும்" என்று சொல்லக் கற்றுக் கொள்ளவேண்டும்."

## நீண்ட ஆயுளுடன்

நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.

சங்கீதம் 91:16

நாம் போதைப் பொருட்கள், ஆண் பெண் உடல் சுகம் காணுதல் இவைகள் மட்டுமே பாவச் செயல்கள் என்று எண்ணுகிறோம். அவைகளே நம் இளவயது இறப்பிற்குக் காரணமென்று நினைக்கிறோம். ஆனால் நாம் பாவங்கள் அல்லவென்று நினைக்கும், கவலைகளும், பீதி, மனஉளைச்சள், இவையெல்லாமும் கூட நம்மின் உடற் கோளாறுகளுக்குக் காரணமாகின்றன. இவையெல்லாம் பாவம் இல்லை என்று எண்ணுகின்றோம், ஆனால் அவை பாவம்தான். இவற்றாலும் இரத்த அழுத்தம், இருதய நோய், வயிற்றுப்புண் போன்றவை நம் உடம்பைப் பாதிப்புக்குள்ளாக்குகிறது.

ஆனால் சங்கீதத்தில் கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களின் படி இந்த சங்கீதத்திலுள்ள அற்புதமான ஆச்சரியமான

வாக்குத்தத்தங்களை அனுபவிப்பதே நீண்ட வாழ்நாட்களினால் நம்மை திருப்தியாக்குவதே அவருடைய திட்டமாகும்.

நீங்கள் உங்கள் வாழ்க்கைப் பாதையில் பயணம் செய்யும்போது மற்றொரு முறை சாத்தானால் பாதிக்கப்பட்டால் சங்கீதம் 91:1,2ல் கூறியுள்ளபடி கர்த்தரின் பாதுகாப்பிலும், அவரை சார்ந்து அவரின் அரணுக்குள்ளும் அடைக்கலம் தேடுவோம்.

## வழிகாட்டியைப் பின்பற்றுங்கள்

ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்.

மாற்கு 14:38

வழி முழுவதிலும் உள்ள வழிகாட்டிகள் காண்பிப்பது - (1) கர்த்தரை நம்பு, கவலையை விடு. (2) பயமும் வேண்டாம், பீதியும் வேண்டாம். (3) அலசுவதைத் தவிர்த்து கவலையை வைத்துவிடு.

பாதையில் இடமோ அல்லது வலமோ அதிகமாய் நகர்ந்து போகாமலிருக்க, வழிகாட்டிகளில் உள்ள குறிப்புகளை கவனிக்கவேண்டும். பள்ளத்தில் விழுவது நேருக்கு நேர் மோதுவது போன்ற விபத்துக்களைத் தவிர்க்க தவறான வழியில் போய்கொண்டிருப்பீர்களென்றால் உங்களை சரிசெய்துக் கொள்ளுங்கள். வாழ்க்கைப் பாதையிலும் கவனத்துடன் பயணம் செய்ய வேண்டும். நம் வாழ்க்கைப் பயணத்தில் வழி தவற ஒரு காரணம் கவலையே.

(யோவான் 15:5)ல் நானே திராட்சை செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன்

மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது, என்று இயேசு கூறுகிறார். இந்த வசனத்தையே தியானித்து மனதில் நிலைநிறுத்துங்கள். கவலை உங்களுடைய நிலைமையை சிறிதும் மாற்றாது. விசுவாசத்தின் தன்மையானது கவலைப்படாது, நாளைய தினத்தைப் பற்றி பீதியடையாது. ஏனென்றால் நாம் எங்கே சென்றாலும் இயேசு ஏற்கனவே அங்கே இருக்கிறாரென்று விசுவாசம் அறிந்திருக்கிறது.

வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்திற்கும் விளக்கமும், காரணங்களும் அறிந்துக் கொள்வதில் பயனில்லை. நீங்கள் என்ன அறிந்துக் கொள்ள வேண்டுமோ அதை தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவாரென்று நம்புங்கள். காரியங்களை அறிந்து அவற்றை நன்றாக செய்யும் ஒருவரை அறிந்துக் கொள்வதில் திருப்தியாயிருங்கள்.

# *பகுதி 2*

# வேதவசனங்கள்

# கவலையை எதிர்கொள்ள வேத வாக்கியங்கள்

கீழ்க்கண்ட வசனங்களை வாசித்து, கவலை நீங்கி, வாழுங்கள்.

மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை
ஒடுக்கும், நல் வார்த்தையோ அதை மகிழ்ச்சியாக்கும்.

நீதிமொழிகள் 12:25

சிறுமைப்பட்டவனுடைய நாட்களெல்லாம்
தீங்குள்ளவைகள், மனரம்மியமோ நித்திய விருந்து.

நீதிமொழிகள் 15:15

உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட
மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால்,
நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.

ஏசாயா 26:3

ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக்
குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்,

என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப் படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?

ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார், அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?

மத்தேயு 6:25,26

ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்.

மத்தயு 6:31

ஆகையால், நாளைக்காகக் கவலைப் படாதிருங்கள். நாளையத்தினம் தன்னுடைய வைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

மத்தேயு 6:34

இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்தப்பட்டவர்கள்,

மாற்கு4:19

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக்

கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை, உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

யோவான் 14:27

நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலா மென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்.

1 கொரிந்தியர் 7:32

நீங்கள் ஒன்றுக்குக் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.

பிலிப்பியர் 4:6,7

உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்க முள்ளவைகளெவைகளோ, நீதியுள்ள வைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவை களெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.

பிலிப்பியர் 4:8

**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடி யால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.**

**1 பேதுரு 5:7**

# கவலையை நீக்க பிரார்த்திப்போம்

பரமபிதாவே, கவலைப்படாதிருக்க எனக்கு உதவுங்கள். கவலை எந்த நற்பயனையும் தருவதில்லை. மேலும் நிலமை அதனால் இன்னும் மோசமடைகிறதென்பதை நான் உணர்ந்துள்ளேன். இயேசுவே, என் எண்ணங்கள் நல்லவைகளாக இருந்து எனக்கும், உங்களுடைய இராஜ்ஜியத்திற்கும் நற்பயனைக் கொடுக்கட்டும்.

தேவனே, நீங்கள் என்மீது கவனம் வைத்திருப்பதற்கு நன்றி கூறுகிறேன். என் வாழ்க்கைக்கு நீங்கள் ஓர் நல்ல ஏற்பாடு வைத்திருக்கிறீர்கள். அதை செயல்படுத்த நீங்கள் காட்டும் வழியில் அடியெடுத்து வைக்க தயாராகயிருக்கிறேன். உங்களிடமும், உங்கள் வாக்கிலும் விசுவாசமும், நம்பிக்கையும் வைக்கிறேன். நான் உங்கள் மீது மட்டும் கவனம் செலுத்துகிறேன். ஏனெனில் நீங்கள் என்மீது உங்கள் முழுக்கவனமும் வைக்கிறீர்கள். அதனால் மற்றவை எனக்குத் தேவையற்றவை. கர்த்தரின் பெயரால் ஜெபிக்கிறேன்.

ஆமென்.

# தேவனோடு தனிப்பட்ட உறவை வைத்துக்கொள்வதற்கான ஜெபம்

மற்ற எல்லாவற்றையும்விட இயேசு உங்களை இரட்சிக்கவும், பரிசுத்த ஆவியினால் நிரப்பவும் விரும்புகிறார். நீங்கள் சமாதானபிரபுவாகிய இயேசுவை உங்கள் ஆண்டவராகவும், மீட்பராகவும் இதுவரை ஒருபோதும் அழைத்திராவிட்டால், நீங்கள் அவ்வாறு செய்யும்படி இப்பொழுது நான் உங்களை அழைக்கிறேன். கீழ்க்கண்ட ஜெபத்தை ஏறெடுங்கள். நீங்கள் இதை முழுமனதோடு உண்மையாகவே செய்தால், கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு புதுவாழ்க்கையை உணருவீர்கள்.

*பிதாவே,*

*நீர் உலகத்தை இவ்வளவாக நேசித்தீர், உம்முடைய ஒரே குமாரனை எங்களுடைய பாவங்களுக்காக மரிக்கக் கொடுத்தீர், அதனால் அவருக்குள் விசுவாசிக்கிறவன் எவனும் அழிந்துபோகாமல், நித்தியவாழ்வைப் பெறுகிறான்.*

*உம்மிடத்திலிருந்துப் பெற்ற வெகுமதியான, விசுவாசத்தின் மூலமாய் கிருபையாக இரட்சிக்கப்பட்டோம் என்று*

*உம்முடைய வசனம் சொல்கிறது. நாங்கள் இரட்சிப்படைய எங்களால் எதுவும் செய்ய இயலாது.*

*உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே உலகத்தின் மீட்பர் என்று நான் நம்பி, என் வாயினால் அறிக்கையிடுகிறேன். என்னுடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு, அதற்கான கிரயத்தை செலுத்தி சிலுவையில் எனக்காக மரித்தார். நீர் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினீர் என்று என் இதயத்தில் விசுவாசிக்கிறேன்.*

*நீர், என்னுடைய பாவங்களை மன்னிக்கும்படி வேண்டுகிறேன். நான் இயேசுவை என்னுடைய ஆண்டவராக அறிக்கையிடுகிறேன். உம்முடைய வசனத்தின்படி நான் இரட்சிக்கப்பட்டேன், உம்முடன் நித்தியத்தைக் கழிப்பேன். பிதாவே! உமக்கு நன்றி!*

*நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

யோவான் 3:16; எபேசியர் 2:8,9 ரோமர் 10:9,10; 1 கொரிந்தியர் 15:3,4; 1 யோவான் 1:9; 4:14-16, 5:1,12,13 பார்க்கவும்.

# ஆசிரியரைப் பற்றி

ஜாய்ஸ் மேயர் அவர்கள் உலகப்பிரசித்திப்பெற்ற வேதாகமப் போதகர்களுள் ஒருவராவார். நியூயார்க் டைம்ஸின் சிறப்பாக விற்பனையாகும் ஆசிரியரான அவருடையப் புத்தகங்கள், பலலட்சக்கணக்கானவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் நம்பிக்கையையும், மீட்பையும் கண்டடைய உதவியுள்ளன. ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் மூலம் பல தலைப்புகளைப் பற்றி அவர் போதிக்கின்றார், அதில் மனம், வாய், மன நிலை, மனப்பான்மை ஆகியவற்றிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர் போதிக்கின்றார். அவருடைய வெளிப்படையான உரையாடும் நடையானது, அவருடைய தனிப்பட்ட அனுபவங்களை வெளிப்படையாகவும், நடைமுறைக்கேற்றப்படியாகவும் பகிர்ந்துக் கொள்ள உதவுகிறது.இதனால் கேட்கிறவர்கள் அவர் என்ன வாழ்க்கையில் கற்றுக் கொண்டாரோஅதை அவர்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த ஏதுவுண்டாகிறது. ஜாய்ஸ் அவர்கள் சுமார் 100 புத்தகங்களை எழுதியுள்ளார். அவை 100 மொழிகளில் மொழிப்பெயர்கப்பட்டுள்ளது. அவர் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ பன்னிரெண்டு உலகளாவிய மற்றும் உள்நாட்டு கருத்தரங்குகளை நடத்துகின்றார், இதன்மூலம் மக்கள் தங்கள் அனுதின வாழ்க்கையை அனுபவிக்கப் போதிக்கின்றார். கடந்த 30 ஆண்டுகளாக ஆண்டுதோறும் நடைபெறும் அவருடைய பெண்கள் கருத்தரங்குக்கு சுமார் 20 லட்சம் பெண்கள் உலகெங்கிலுமிருந்து கலந்துக் கொள்கின்றனர். கஷ்டப்படும் மக்களுக்கு உதவ வேண்டுமென்ற ஜாய்ஸின் வாஞ்சை தான் “நம்பிக்கையின் கரம்” என்ற தரிசனத்திற்கு அஸ்திபாரமாக அமைந்திருக்கிறது, இது ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் ஊழியப் பணி கிளையாகும், இது அவருடைய ஊராகிய செயின்ட் லூயிலும் உலகின் பல்வேறு இடங்களிலும் நடைபெறும் அருட்பணிகளை தாங்கிவருகின்றது.

To contact the author in the United States, please write:
Joyce Meyer Ministries
P.O. Box 655,
Fenton, Missouri 63026
or call: (636) 349-0303
or log on to: www.joycemeyer.org

To contact the author in India, please write:
Joyce Meyer Ministries
Nanakramguda,
Hyderabad - 500 008
or call: 2300 6777
or log on to: www.jmmindia.org